பக்கங்கள்: பதினாறு

உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 27 சனிக்கிழமை (11.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 227

வன்னி அகதிகளின் பாதுகாப்பில் மேலும் முன்னேற்றம் தேவை என்கிறது ஐ.நா.

அங்கு உள்ளோரின் ஒட்டுமொத்தக் கவலை நடமாட்ட சுதந்திரமே

கொழும்பு, ஜூலை 11

மோதல் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது வவுனியா முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருப்போரின் பாதுகாப்புத் தொடர்பில் சில முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும், மேலும் நடவடிக்கைகள் அவசியமாகவுள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தி உள்ளது.

இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கோரப்பட்டிருக்கின்றது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

குளிரூட்டி மூலம் யாழ். கடலுணவு கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை11

யாழ். மாவட்டத்தில் இருந்து கடலுணவுகளை குளிரூட்டி வாகனங்கள் மூலம் ஏ-9 வீதியூடாக கொழும்புக்கு எடுத்துச் செல்லும் சேவையை கடற்றொழில் அமைச்சர் பிலீக்ஸ் பெரேரா இன்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கிறார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வை முன்வைக்க ஜனாதிபதி தயாராக இருக்கிறார்

மாநகரசபைத் தேர்தலை பேரம் பேசும் ஒன்றாகக் கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணம்,ஜூலை11

தமிழ்மக்களின் பிரச்சினைக்கு 13 ஆவது சட்டத் திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு ஒன்றை முன்வைக்க ஜனாதிபதி தயாராக இருக்கிறார்.

எனவே மாநகர சபைத் தேர்தலை மாநகர சபைப் பிரதேசத்துக்குள் மட்டுப்படுத்தாமல், முழுத் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வைத்தரக்கூடிய - பேரம் பேசக் கூடிய - தேர்தலாகப் பார்க்க வேண்டும். பேரம் பேசக்கூடிய சத்தியாக நாங்கள் வருவதற்கு மாநகர சபைத் தேர்தலின் வெற்றி உதவும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்படிக் கூறியுள்ளார்.

நேற்று மாலை அவரது அலுவலகத்தில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

1000 புலிகளுக்கு எதிராக வழக்கு; 9 ஆயிரம் பேருக்கு புனர்வாழ்வு

தளபதி பொன்சேகா தகவல்

கொழும்பு, ஜூலை 11

பாதுகாப்புத் தரப்பினால் கைது செய்யப்பட்டுள்ள 10 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களில் ஆயிரம் பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

(16 ஆம் பக்கம் பார்க்க)

அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை நீதிவான் முன் ஆஜர் செய்து விடுவிக்க அரசு தயாரா?

அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர்பில் உயர்நீதிமன்று ஆலோசனை

கொழும்பு, ஜூலை 11

வவுனியா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை நீதிவான் முன் ஆஜர் செய்து விடுவிக்க அரசு தயாரா?

இது குறித்து. ஆலோசித்து உரிய பதிலை நீதிமன்றுக்குத் தெரிவியுங்கள்.

- இவ்வாறு கூறும் யோசனை ஒன்றை சட்டமா அதிபருக்கு முன்வைத்திருக்கின்றது உயர்நீதிமன்றம்.

வவுனியா தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள ஒரு குடும்பத்தவர்கள் தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீதே உயர்நீதிமன்றம் இந்த ஆலோசனையை முன்வைத்து, இது தொடர்பில் சட்டமா அதிபரின் பதிலை எதிர்வரும் 20 ஆம் திகதி நீதிமன்றுக்குத் தெரியப்படுத்துமாறு

(16 ஆம் பக்கம் பார்க்க)

யுத்தத்தின் போது இறந்தவர்கள் குறித்த சர்ச்சை:

ஐ.நா. சபை வெளியிட்ட எண்ணிக்கையில் மாற்றம் எதுவும் செய்யப்பட மாட்டாது

கொழும்பு, ஜூலை 11

வன்னிக் களமுனையில் யுத்தம் இடம் பெற்ற சந்தர்ப்பத்தில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் காயமுற்றோர் குறித்த தமது தகவல்களில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படமாட்டாது என இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி கோர்டன் வைஸ் தெரித்துள்ளார். (16 ஆம் பக்கம் பார்க்க)

13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று தீர்வு வழங்க இந்தியாவிடம் உறுதி வழங்கி உள்ளது இலங்கை

வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

டில்லி, ஜூலை11

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தவும், அதற்கு அப்பால் சென்று அர்த்த புஷ்டியாக அதிகாரப்பகிர்வை எட்டவும் இலங்கை அரசு உறுதியளித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்றுமுன்தினம் இவ்வாறு நாடாளுமன்றில் (லோக் சபாவில்) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

தமிழ்க்கட்சிகள் உட்பட அனைத்துக்கட்சி

(16 ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant

தம் புரியாணி, நூடில்ஸ், (f)பிறைட்ரைஸ், ஸ்பெஷல் நான், பூரி, சூப் மற்றும் சைனிஸ், இந்தியன் ஸ்பெஷல் உணவு, கறி வகைகள்

Open 11.00 am to 11.00 pm

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. CALL: 0112504020

இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். CALL: 021-2225899

கொசி உணவகம் Feel at home

யாழ் நகரிலும் கொழும்பிலும் நீண்ட காலமாக சுவையான, தரமான Indian, Chinees உணவு வகைகளுடன்

AC Non AC Rooms Available

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொழும்பில் இருந்து வருகைதந்த ஏற்றுமதியாளர், இறக்குமதியாளர் தொழிற்சாலை உரிமையாளர்கள் ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழுவினர் யாழ்.வணிகர் சங்கப் பிரதிநிதிகளை யாழ்.வணிகர் கழக அலுவலகத்தில் சந்தித்துப் பல தரப்பட்ட வர்த்தகப் பொருள்களின் விற்பனை (படங்கள்:லக்ஸ்மன்)

யாழ்.வந்த உயர்மட்ட வர்த்தகக் குழு
கைத்தொழில்களை ஆரம்பிப்பது குறித்து ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்.மாவட்டத்தில் புதிய கைத்தொழில்கள் மற்றும் புதிய வர்த்தகம் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கும் வகையில் 13 பேர் கொண்ட உயர் மட்ட வர்த்தகர்கள் குழு ஒன்று நேற்று யாழ்ப் பாணத்துக்கு வருகை தந்தது.

யாழ்.வணிகர் கழகத்துக்கு நேற்று வருகைதந்த அந்தக் குழு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் கைத்தொழிலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

கட்டடப் பணி, தோல் உற்பத்திப் பொருள்கள், பெற்றோல் நிலையம், கார் விற்பனை உட்பட பல்வேறு துறை சார்ந்த தொழில் துறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

கூட்டு முயற்சியில் தொழில்களை ஆரம்பிக்கும் வாய்ப்புக் குறித்தும் குழுவினர் ஆராய்ந்துள்ளனர்.

இங்கு தங்கியுள்ள குழுவினர் பல்வேறு வர்த்தகத் தரப்புக்களுடனும் கலந்துரையாடல்களை நேற்றிரவு நடத்தினர். இன்று மாலை கொழும்பு திரும்பவிருக்கின்றனர். (1)

பன்னாலையில் இன்று 'கோப்சிற்றி' திறப்பு

யாழ்ப்பாணம் ஜூலை - 11

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பன்னாலையில் இன்று காலை 10 மணிக்கு மினி கோப் சிற்றி விற்பனை நிலையம் ஒன்றை திறந்து வைக்கவுள்ளது.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் நிகழ்வில் பிரதம விருந்தினரக கலந்து கொண்டு இந்த மினி கொப்சிற்றியை திறந்த வைப்பார். (1-224)

காரைநகர் வியாவில் பூரணை
பொற்கலை சமேத ஐயனார் ஆலய
500 ஆண்டுகளின் பின் நடைபெறும் முதலாவது
மகோற்சவ விஞ்ஞாபனம்

கொடியேற்றம்:
12.07.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணி

தேர் வெள்ளோட்டம்:
19.07.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி

தேர்த் திருவிழா:
20.07.2009 திங்கட்கிழமை மு.ப. 10 மணி

தீர்த்தத் திருவிழா:
21.07.2009 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி

கொடி இறக்கம் :
21.07.20009 செவ்வாய்க்கிழமை இரவு 9 மணி

பூங்காவனத் திருவிழா:
22.07.2009 புதன்கிழமை இரவு 9 மணி

வைரவர் மடை :
23.07.2009 வியாழக்கிழமை மாலை 4 மணி

தேவாலயப் பிரதம குரு: சிவாகம கிரிய தத்துவ நிதி
ஸ்ரீ விஸ்வஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்

ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்

வியாவில், காரைநகர். ஆலய அறங்காவலர்

அடியார்களை கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்
உணவு, தங்குமிடவசதி
செய்யப்படும்.

சிறப்புற வாழ்த்துவோர்:
லண்டன் வாழ் காரை. மக்கள்

லண்டனில் உயர்கல்வி பயில்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

* "A" தர பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் விரும்பிய கற்கை நெறிகளுக்கு அனுமதி.
* குறைந்த கட்டணச் சலுகைகள், U.K யில் சகல வசதிகளும்.
* தினமும் காலை 8 மணியிலிருந்து 5 மணி வரை நேரில் சந்திக்க ஏற்பாடு. சந்தித்தவர்கள் விவரங்களுடன் நேரில் வரவும்.

தொடர்பு : 021 222 3818
எந்நேரமும் தொடர்பு : 0774528818
E.Mail : mg1404_2009@yahoo.com
148, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (யுனிசெவ் முன்பாக).

கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திரு.செ.ஜயபாலன் அவர்களின் அன்புத்தாயார்

செல்லையா பூமாதேவி

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர்
நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்.

விற்பனைக்கு

* புறாயிலர் 1 Kg க்கு ரூ.100 குறைக்கப்பட்டுள்ளது. அத்தோடு கல்பேட் விற்பனைக்கு உண்டு.

தாசன் பார்,
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

GRADE 10,ICT,GIT பரீட்சைகளுக்கான மாதிரி வினா - விடை தொகுப்புகள் விற்பனையாகின்றன.
விலை 40/00
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்பாணம்.

தவறிவிட்டது

சங்குவேலி,மானிப்பாயைச் சேர்ந்த சண்முகராசா சதீஸ்வரன் ஆகிய எனது தே.அ.அட்டை இல.813076601V (08.07.2009) அன்று கொக்குவில் சந்திக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் [illegible] வெகுமதி வழங்கப்படும்.

ஓராண்டு நிறைவு நினைவு

தோற்றம்: 04.05.1927

மறைவு: 22.06.2008

அமரர்
காசிப்பிள்ளை பஞ்சாட்சரம்
திதி :- சங்கடகரசதுர்த்தி

அண்ணனெம் பருத்திப் பிள்ளையாரொடும்
அருள் சேர் தம்பி
நல்லை - எம் இணுவைக் கந்தன் நலன்தரு
விளாத்தியானின்
எண்ணமும் வாழ்வுமாய் எங்கள் இதயத்தில்
நீங்கா தென்றும்
நல்லொளித்தீபமாய் எந்நாளிலும்
வாழ்வீர் அப்பா
இல் அக விளக்கே போற்றி!!!

'செல்வபதி',
பாப்பா தோட்ட வீதி,
இணுவில் மேற்கு.

குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி

இலங்கை வங்கி, சுன்னாகம்
மேற்தரக்கிளையின் முகாமையாளர்
எஸ்.பி.அரசகுமார் அவர்களின்
சகோதரரான
சின்னத்துரை பொரினிக் அரசேந்திரன்
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிராத்திக்கின்றோம்.

நவசக்தி சன சமூக நிலையம்,
நவசக்தி விளையாட்டுக்கழகம்,
உரும்பிராய் வடக்கு.

மரண அறிவித்தல்

திருமதி முத்தையா அன்னப்பிள்ளை

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடியில் வசித்தவரும் தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி முத்தையா அன்னப்பிள்ளை நேற்று (10.07.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பார்வதி தம்பதியினரது அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா தம்பதியினரது அன்பு மருமகளும் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஞானசுந்தரம் (துரைராசா) மற்றும் சீவரெத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் லிங்காதேவி, ஞானேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் மஞ்சுளா, கலைச்செல்வி, விக்னேஸ்வரன், ஞானேஸ்வரன், கலைமகள், விஜயவாணி, கௌரீஸ்வரன், ஜெகதீஸ்வரன், கஜரூபன், ஜெகதீஸ்வரி, ஞானகாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/33, வைரவர் கோயில் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மு.சீவரெத்தினம்
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

தொண்டுப் பணி தொட அனுமதிக்குக!

இலங்கையில் - குறிப்பாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் - சர்வதேசத் தொண்டு அமைப்புகளின் செயற்பாடுகளைக் குறைத்துக் கட்டுப்படுத்த அரசு தீர்மானித்துவிட்டது. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வரை அனைத்துத் தரப்பினர்களுக்கும் இது தொடர்பான உத்தரவுகள் பறந்திருக்கின்றன.

இந்த உத்தரவை அடுத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் தனது நடவடிக்கைகளைக் குறைப்பதற்கு ஆரம்பித்துவிட்டது.

முதல் கட்டமாக, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவைக் கிழக்கிலிருந்து காலி செய்யும்படி கேட்கப்பட்டதை அடுத்து, அந்த அமைப்பு அந்த நடவடிக்கையை - வெளியேறும் செயற்பாட்டை - தான் ஆரம்பித்துவிட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றது.

வன்னியில் கணிசமான பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம், அந்த மீட்பதற்கான தனது இராணுவ நடவடிக்கைகளை அங்கு தீவிரப்படுத்த முன்னர், அங்கு நிலை கொண்டிருந்த உள்ளூர், சர்வதேச தொண்டர் அமைப்புகள் அனைத்தையும் அங்கிருந்து வெளியேறுமாறு அரசு கண்டிப்பான உத்தரவை விடுத்தது. குறுகிய கால அவகாசத்துடன் விடுக்கப்பட்ட இந்தப் பணிப்புரையை ஏற்று சகல தொண்டர் அமைப்புகளும், அங்கிருந்த மக்கள் தொடர்பான தமது மனிதநேயப் பணிகளை அப்படி, அப்படியே கைவிட்டபடி, வெளியேறின.

எனினும், அச்சமயத்தில் கூட அங்கிருந்து வெளியேறும்படி செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவை அரசுத் தலைமை கோரவில்லை. யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்து, பேரழிவுகள் நேர்ந்து, பெரும் வன்முறைப் புயல் வீசி அடங்கும் வரையில் கூட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அங்கு தனது மனிதாபிமானத் தொண்டுப் பணியைத் தொட அனுமதிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இப்போது கதவடைப்பு உத்தரவு - மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் - செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் சேர்ந்தே வந்திருக்கின்றது.

நாட்டில் இனப்பிரச்சினையை ஒட்டிய முரண்பாடு முற்றி, இந்திய அமைதிப் படை இலங்கைக்குள் நுழைந்து, தமிழர் தாயகப் பகுதியை அது ஆக்கிரமித்து நிலை கொண்டிருந்த சமயத்தில்-

தென்னிலங்கையில் சிங்களத் தீவிரவாதிகளான ஜே.வி.பியினின் கிளர்ச்சி உச்சக்கட்டத்தை எட்டியிருந்த வேளையில் -

சுவிஸை மையமாகக் கொண்டு இயங்கி வரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் சேவையை - 1989 இல் - அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா அழைப்பு விடுத்து நாட்டுக்குப் பெற்றார்.

அன்று முதல் இன்று வரை - சுமார் இருபது ஆண்டு காலம் - இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளின் பக்கம் எதுவும் சாராமல் - நடுநிலை பேணி - தனது பணியை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு இங்கு ஆற்றி வந்திருக்கின்றது என்ற பாராட்டுக்குரிய சேவை இங்கு பதிவு செய்யப்படவேண்டியதொன்றாகும்.

'நாட்டில் எந்தப் பாகத்திலும் - எந்த மூலை முடுக்கிலும் - அரசின் முழு அதிகாரமும் இன்று செல்லுகின்றது. எனவே நாட்டின் எப்பகுதியிலும் உள்ள பிரஜை எவரையும் அரசு எட்டுவதற்கு - அல்லது தொடர்பு கொள்வதற்கு - எந்த மூன்றாவது நபரின் அனுசரணையோ அல்லது உதவியோ தனக்குத் தேவை என அரசு கருதவேயில்லை. அத்தோடு பிணக்கில் சிக்கியுள்ள மக்களுக்கு அரசினால் நேரடியாக உதவி வழங்க முடியும் என்ற நிலைமை இருப்பதனால் இத்தகைய உதவி வசதிகளுக்காக சர்வதேசத் தொண்டர் அமைப்புகளிடம் கையை ஏந்த வேண்டிய நெருக்கடி இனியும் நீடிப்பதாக அரசு கருதவில்லை. ஆகவேதான் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு உட்பட தொண்டு நிறுவனங்களின் செயற்பாட்டைக் குறைத்துக் கொள்ளும்படியான உத்தரவை அரசுத் தலைமை விடுத்தது' - என்று அரசுப் பக்கத்திலிருந்து விளக்கமும் கூறப் படுகின்றது.

ஆனால் தமிழர் தரப்பைப் பொறுத்தவரை அரசின் இந்த நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்பதுதான் அவர்களின் கருத்து.

நேரடியாக வன்னி யுத்தத்தினால் இடம்பெயர வைக்கப்பட்ட சுமார் மூன்று லட்சம் தமிழ் அகதிகள் நலன்புரி மையங்கள் என்ற பெயரில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தவிரவும், வடக்கிலும் கிழக்கிலும் தமது சொந்த இடங்களில் இருந்து துரத்தப்பட்ட பல்லாயிரக் கணக்கானோர் இன்னும் ஏதிலிகளாக - அகதிகளாக - முகாம்களில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

உதாரணமாக வடக்கில் - யாழ். குடாநாட்டில் - வலிகாமம் வடக்கின் பெரும்பகுதி உயர் பாதுகாப்பு வலய மாக அறிவிக்கப்பட்ட பின்னணியில், அங்கிருந்து இடம்பெயர்ந்து இன்னும் முகாம்களிலும், தற்காலிகத் தங்குமிடங்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சம்புகுந்து தமது காலத்தைக் கழிக்கும் பல்லாயிரக் கணக்கானோரின் அவலம் நீடிக்கின்றது.

இவர்களை எல்லாம் ஒரே சமயத்தில் பராமரிப்பது என்பது மிகப்பெரிய - சிரமமான - மனிதாபிமானப் பணியாகும். அதனை முழு அளவில் முன்னெடுக்கும் வலிமையும், திறமையும் தனக்கு இருப்பதாக அரசு கூறிக்கொண்டாலும் யதார்த்தம் என்னவென்பது இந்த விடயங்களில் நேரடியாகப் பேரவலங்களை எதிர்கொண்டு அனுபவித்துவரும் தமிழர்களுக்கே நன்கு தெரியும்; புரியும்.

மேலும், தடுப்புக் காவலில் உள்ளோரை நேரடியாகச் சென்று சந்தித்து அவர்களின் நலன்களைக் கவனிக்கும் பிரத்தியேக ஆணைபெற்ற செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணி, சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்டோரை யுத்தத்தின் முடிவில் சிறைக் கைதிகளாக அரசு பிடித்து வைத்திருக்கும் இச்சமயத்தில் மிக அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது.

இந்தவேளையில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு உட்பட்ட சர்வதேசத் தொண்டர் அமைப்புகளின் மனிதாபிமானப் பணியை - பகுதியாகவேனும் - முடக்கும் தீர்மானத்தை அரசு மீள்பரிசீலனை செய்து வாபஸ் பெறுவதே சிறந்தது; பொருத்தமானது.

வடக்கின் கடல் வளத்தை 23 மடங்காக்க திட்ட வரைவுகள் தயாரிக்கப்படுகின்றன

யாழ். வந்த கடற்றொழில் அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 11

நாட்டின் மொத்த கடற்பரப்பில் எட்டு மடங்குக்கு அதிகமான கடல் வளம் வடக்கிலேயே உள்ளது. அந்த கடல் வளத்தை 23 மடங்காக அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அதற்கான திட்ட வரைவை நாம் தயாரித்துள்ளோம்.

அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் போது யாழ். மாவட்டத்தின் நிலை மாற்றமடையும்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள கடற்றொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடற்றொழிலாளர்களை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடுகையில் இப்படித் தெரிவித்தார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

கடற்றொழிலாளர்கள் தாம் எதிர் நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

அமைச்சர் அங்கு பேசுகையில் கூறியவை வருமாறு:

எதிர்காலத்தில் கடல்தான் இந்த நாட்டின் திறைசேரியாகும். எனவே கடற்றொழிலாளர்கள் தமது வருமானத்தில் முன்னேற்றம் காணக்கூடியதாக இருக்கும். உங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

புத்தளத்தில் இருந்து கிருந்தை வரை கடல்வளம் சிறந்து காணப்படுகின்றது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டை வேகமாக முன்னேற்ற வேண்டும் என்பதில் ஜனாதிபதி மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்.

கடற்றொழிலாளர்களின் நலனுக்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்து அரசு செயற்படுகின்றது. கடந்த கால யாழ்ப்பாண நிலைக்கும் இப்போதைய நிலைக்கும் வித்தியாசம் ஏனைய மாவட்டங்களுக்குச் சமமாக யாழ்.மாவட்டத்தின் நிலை மாறுதல் அடைய வேண்டும்.

இலங்கையில் உள்ள மொத்தக் கடல் நிலப்பரப்பை விட 8மடங்கு அதிகமானது. அதை 23 மடங்காக அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளன.

இங்கு கடல் வளங்களை அதிகரிப்பதற்காகத் திட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மீன்பிடி அமைச்சு கரையோர நிலையங்களை அமைக்கவும் படகுகளை மறுசீரமைக்கவும் குளிரூட்டி அறைகள் ஐஸ் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைக்கவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நன்நீர் மீன்பிடித் தொழிலையும் இங்கு அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.அனுராதபுரம், பொலநறுவை பகுதிகளில் நன்நீர் மீன் வளர்ப்பு சிறப்பான வருமானத்தை வழங்கியுள்ளது. குளங்கள் உள்ள பகுதிகளில் இங்கு நன்நீர் மீன் வளர்ப்புத் திட்டத்தை செயற்படுத்தும்போது 6 மாதங்களில் கணிசமான வருமானம் பெறக்கூடியதாக இருக்கும். அனுராதபுரம், பொலநறுவைப் பகுதிகள் 45 ஆயிரம் மீன் குஞ்சுகள் வழங்கியுள்ளோம். இதனால் 4 மில்லியன் ரூபாவைப் பெற்றுள்ளார்கள்.

இங்குள்ள கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு அவரின் ஆலோசனைகளுடன் அவற்றுக்குத் தீர்வுகாண் பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் - என்றார் அவர்.

(1-111-224)

பருத்தித்துறையில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிதர்சன் கிறீம் ஹவுஸ் நிறுவன ஆதரவில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது.

இந்தச் சுற்றுப் போட்டியில் 39 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன.

(7)

குடாநாட்டில் மூன்று கிளைகளை செலான் வங்கி விரைவில் ஆரம்பிக்கின்றது

யாழ். வந்த தலைவர் ஈஸ்மன் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ். மக்களின் நலன்கருதி செலான் வங்கியின் கிளைகள் விரைவில் நெல்லியடி, மானிப்பாய், சங்கானை ஆகிய இடங்களில்திறக்க இருக்கிறது.

செலான் வங்கியின் புதிய தலைவராக பதவியேற்றுள்ள ஈஸ்மன் நாரன்கொட மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அவர் யாழ்.கிளை அலுவலர்களுடன் கலந்துரையாடுகையில் இதனைத் தெரிவித்தார்.

தலைவராகப் பதவியேற்ற பின்னர் யாழ். நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக வங்கியின் பணிப்பாளர் றியர் அட்மிரல் பி.ஏ.ஜே. பிரீஸ், பொது முகாமையாளர் அஜித் பஸ்குவல் ஆகியோர் சகிதம் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

யாழ். மாவட்ட மக்களுக்கு வங்கியின் ஊடாக ஆற்றவேண்டிய பணிகள் மற்றும் அவர்களின் தேவைகள் ஆகியன தொடர்பாக அவர் தமது அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

யாழ்.கிளையில் முகாமையாளர் ஏ.எஸ். அரவிந்தன் மற்றும் அதிகாரிகள் யாழ். நிலைமை தொடர்பாக அவருக்கு விளக்கமளித்தனர்.

(1)

இடம்பெயர்ந்துள்ள சிறுவர்களைப் பாதுகாக்க சிறப்புக் குழுக்களை நியமித்தது அரசாங்கம்

நலன்புரி முகாம்களில் அவற்றின் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 11

மோதல்களினால் பாதிக்கப்பட்டும், இடம்பெயர்ந்தும் உள்ள சிறுவர்கள் தொடர்பான பாதுகாப்பு மற்றும் அனுசரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென சிறப்புத் தகுதிகளைக் கொண்ட பிரமுகர்களை உள்ளடக்கிய குழுக்களை அரசு நியமித்துள்ளது.

சிறுவர்களின் உணர்வுகள், உடல் நிலைகள், சிறுவர் உளவியல் மற்றும் சமூகத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் சுகாதாரம், சிறுவர் பாதுகாப்பு, சட்ட அமுலாக்கம் போன்ற துறைகளில் நிபுணத்துவம் உள்ளவர்கள் இக் குழுக்களில் இடம்பெற்றுள்ளார்கள்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஜெகத் வெல்ல வத்த இது தொடர்பாக தகவல் தருகையில், இந்தக் குழுக்கள் ஆய்வுத்திட்டங்களை மேற்கொள்ளும் என்றும் சிறு வர்களின் குறுகிய கால, நீண்ட காலத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் கவனம் செலுத்துவார்கள் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

இதுவரை 10 ஆயிரம் சிறுவர்கள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு இனங்காணப்பட்டுள்ளார்கள். அவர்களின் குறுகிய காலத் தேவைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. அவர்களின் நீண்ட காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொருட்டு அறிக்கைகள் கோரப்பட்டு ஆய்வுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சிறப்புக் குழுக்களில் குழந்தை மருத்துவர்களும் இடம்பெற்றிருக்கிறார்கள். இவர்கள் இடம்பெயர்ந்தோர் சிறுவர்களின் உடல், உள ஆரோக்கிய நிலைமைகளையும், சுனாமி மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட அல்லது துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்ட நிலைமை மற்றும் தேவைகளை ஆராய்ந்து அறிவார்கள்.

அநாதைகள் மற்றும் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்ட சிறுவர்களின் தேவைகளுக்கு அவசர முன்னுரிமை கொடுக்கப்படவிருக்கிறது.

தெரிவு செய்யப்பட்ட சிலர் விடயத்தில் மீளவும் அவர்களது பெற்றோர்களிடம் அல்லது நெருங்கிய உறவினரிடம் ஒப்படைப்பது தொடர்பான முடிவுகள் எடுப்பதிலும் முக்கியத்துவம் கொடுக்கப்படும். இவர்கள் சமூக விரோத சக்திகளின் கைகளில் வீழ்ந்து விடாத வகையில் மிகுந்த கவனம் எடுக்கப்படும்.

இந்தக் குழுக்கள் தற்போது இராமநாதபுரம் நலன்புரி நிலையத்திலிருந்து பணிகளை மேற்கொள்கின்றன. இந்த நலன்புரிக் கிராமத்தில் சிறுவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதின் பின் ஏனைய நலன்புரி கிராமங்களுக்கும் படிப்படியாக அவர்கள் செல்வார்கள்- என்றார் வெல்ல வத்த.

(ப)

நாளை

ஆனி 28	12.07.2009 ஞாயிற்றுக்கிழமை
திதி:	பஞ்சமி மு.இ. 10.58 வரை
நட்சத்திரம்:	சதயம் மு.ப. 11.06 வரை
சுபநேரம்:	08.59 - 10.29
ராகுகாலம்	04.29 - 05.59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.நகரில் முதலாவது

முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்டு குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்

Annai Nagaa Food City

புதுப்பிரவேசத்துடன்

KEELLS The Taste of Goodness

Prima

★சுத்தமாக பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்.
★கீல்ஸ் சொஸேயஸ் ★பிறிமா சிக்கன்
★எலிபன் ஹவுஸ் ஐஸ்கிறீம் வகைகள் [குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்]
★இறக்குமதி செய்யப்பட்ட பழ வகைகள், பழரசங்கள் மற்றும் குளிர்பான வகைகள்.
★அன்பளிப்பு, அழகுசாதன வாசனைத் திரவியங்கள்.
★சிறுவர்களுக்கான ஆடைகள், பாடசாலை உபகரணங்கள், எழுதுகருவிகள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள

அன்னை நாகா பூட்சிற்றி

வாடிக்கையாளர் நலன் கருதி இரவு 7.00 மணிவரை திறந்திருக்கும்.

175, K.K.S. Road, Jaffna. T.P.-0212225515, 0212227875

மரண அறிவித்தல்

"கர்த்தருக்குள் நித்திரை அடைந்தவர்கள் பாக்கியவான்கள்"

டொமினிக் அரசேந்திரன் (ஜோய்)



சங்குவேலி வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை டொமினிக் அரசேந்திரன் 07 07.2009 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னத்துரை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) - திருமதி சின்னத்துரை கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், இறப்பியல்பிள்ளை மொனிக்கம்மாவின் அன்புக் கணவரும், அமரர்களான இறப்பியல்பிள்ளை - மிசிலாமணி தம்பதியினரின் மருமகனும், டிமோசிலின் (கனடா), மொறின் சாமினா (பிரதேச செயலகம், நல்லூர்), யூடிற் டிலக்சினி, நியூஜன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்திமா, பிரியவத்சலன் (வசி), தர்மகுமார் (சாரதி) ஆகியோரின் அன்பு மாமனும், றிசாளினி, ஜெனிஸ்ரன், ஆகியோரின் அன்புப் பேரனும், அரசநாதன் (வவா), தேவியற்கரசி (இளைப்பாறிய லிகிதர், ப.தெ.வ.அ.கூ.ச, சுன்னாகம்), அரசகுமார் (முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னாகம்), இராணியற்கரசி, பூவையற்கரசி (கனடா), அரசதுரை (கனடா), அரசஜோதி (ஜேர்மன்), அரசநாயகம் (கனடா), அரசகேசரி (பிரதிப் பணிப்பாளர், விவசாய ஆராய்ச்சி வடபிராந்தியம்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், மரியதாஸ், நேசமணி(கொழும்பு), ஜோர்ஜ் பெனடிற் (அபுதாபி), மோசஸ் (சுவிஸ்), செல்வம் (அமெரிக்கா), றீற்றாதேவி,தேவநேசன், ஜெனிற்றா (கல்வித் திணைக்களம், வலிகாமம்), ஜேசுதாசன், சுந்தரலிங்கம் (கனடா), கல்யாணி (கனடா), சூரியா (கனடா),சாந்தி ஆகியோரின் மைத்துனரும் , செல்வராணி, சூசைப்பிள்ளை, டெனி, புஸ்பா, ஜெயன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (12.07.2009) ஞாயிறு பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுவில் கிறிஸ்தவ சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக கொண்டு செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் கோட்டப் பாடசாலைகளில் கட்டாயக் கல்வியை வலுப்படுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் கட்டாயக் கல்வியை வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகளின் ஓர் அங்கமாக இராமநாதன் கல்லூரியில் செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.சுபேரநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.தேசிய கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன், சிரேஷ்ட விரிவுரையாளர் க.இ.கமலநாதன், அகவெளி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தெ.மதுசூதனன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இந்த நிகழ்விலே பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

* கட்டாயக் கல்விக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பாடசாலை செல்லாதிருக்கும் பிள்ளைகளுக்குக் கல்வி வசதியை ஏற்படுத்துதல்.
* பாடசாலைகளில் மாணவர் வரவு வீதம் அதிகரித்தலை அவதானிப்பதற்கான பரிசீலனைக் குழுவை அமைத்தல்.
* பாடசாலைகள் இது தொடர்பாக மாதாந்த அறிக்கையை அனுப்புதல்.
* யுனிசெவ் அனுசரணையுடன் பிரதேச செயலர், சமூர்த்தி உத்தியோகத்தர், கிராம சேவகர்கள் உதவியுடன் வீட்டுக்கு வீடு சென்று பாடசாலை செல்லாதோர் விவரம் சேகரித்தல். அவர்களை மீண்டும் பாடசாலையிற் சேர்த்தல் என்பனவே எதிர்காலத் திட்டங்களாக அமைந்துள்ளன. (203-55)

வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறை காரணமாக ஆஸ்பத்திரிகளை செயற்பட வைப்பதில் நெருக்கடி நிலை

பொதுமக்களை ஒத்துழைக்குமாறு பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்.மாவட்டத்தில் உள்ள 31 வைத்திய சாலைகளையும் இயங்க வைப்பதற்கு 110 மருந்துவ அதிகாரிகளும் 58 பதிவு வைத்திய உத்தியோகத்தர்களும் தேவை.

ஆனால் தற்போது 15 வைத்திய அதிகாரிகளும் 19 பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும் மட்டுமே உள்ளனர்.

இதனால் வைத்தியசாலைகளை உரிய வகையில் செயற்பட வைப்பதில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்.

கடந்த மாதம் 24 ஆம் திகதிய உதயனில் 'மானிப்பாய் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பும் நிலை' என்னும் தலைப்பில் வெளியாகியிருந்த செய்திக்கு விளக்கம் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுகாதாரப் பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ள விளக்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் தற்போது 37 வைத்தியசாலைகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இவற்றை சுமுகமாக இயங்க வைப்பதற்கு எமக்கு 110 மருத்துவ அதிகாரிகளும் 58 பதிவு வைத்திய உத்தியோகத்தர்களும் தேவை.

ஆனால் தற்போது 15 வைத்திய அதிகாரிகளும் 19 பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும் 20 மீள் நியமனம் பெற்ற வைத்தியர்களும் மட்டுமே பணியாற்றிக் கொண்டு இருக்கின்றனர்.

தற்போது இயங்கும் 37 வைத்தியசாலைகளில் 30 வைத்தியசாலைகளில் ஒரே ஒரு வைத்தியர் மட்டும் பணி புரிகின்றார்.

இவற்றைவிட நெடுந்தீவு, அனலைதீவு, புங்குடுதீவு, அம்பன் ஆகிய வைத்தியசாலைகளுக்கு நிரந்தர வைத்தியர்கள் எவரும் இல்லை நெடுந்தீவு, அனலைதீவு வைத்தியசாலைகளுக்கு மாதாந்த சுற்று அடிப்படையில் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து வைத்தியர்கள் பணிக்குச் செல்கின்றனர்.

புங்குடுதீவு, அம்பன் வைத்தியசாலைகளுக்கும் வாரத்தில் இரண்டு முறை மட்டுமே ஏனைய வைத்தியசாலைகளிலிருந்து வைத்தியர்கள் செல்கின்றனர்.

தனியொரு வைத்தியர் பணிபுரியும் வைத்தியசாலைகளில் அவ்வைத்தியர் விடுமுறையில் செல்லும் போது அல்லது தீவகப் பகுதி வைத்தியசாலைகளுக்கு மாதாந்த சுற்றுக் கடமைக்கு செலலும்போது பதில் கடமைக்காக இன்னோர் வைத்தியசாலை வைத்தியரையே அனுப்ப வேண்டியுள்ளது.

இந்நிலையில் அவ் வைத்தியர் காலையில் ஒரு வைத்தியாசாலையிலும் பிற்பகலில் மற்றைய வைத்தியசாலையிலும் கடமையாற்ற வேண்டியுள்ளது.

எனவே வைத்தியர்களுக்கான பற்றாக்குறையின் மத்தியிலும் எந்தவொரு வைத்தியசாலையினையும் மூடிவிடாது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் எமது சேவைகளை வழங்கி வருகின்றோம்.

வைத்தியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு பல தடவைகள் நாம் முயற்சி எடுத்தும் இதுவரை எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

எனவே வைத்தியர்களின் பற்றாக்குறை தீரும்வரை எந்தவொரு வைத்தியசாலையையும் மூடிவிடாது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் சேவைகளை நாம் வழங்கி வருவதினை பொதுமக்கள் உணர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்-என்றுள்ளது. (203)

நினைவஞ்சலி நிகழ்வும் கல்விக் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், ஜூலை 11

அமரர் மணியம் கணபதிப்பிள்ளையின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும், கல்விக் கௌரவிப்பும் நாளை காலை 8.30 மணிக்கு தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளன.

மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியத்தின் செயலாளர் இ.குகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வடமராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் தும்பளை சிவப்பிர காச மகா வித்தியாலய அதிபர் கே.கே. யோகநாதன் நினைவுரையையும், குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலை அதிபர் தியாக சோமாஸ் காந்தராஜாக் குருகள் ஆசியுரையும், முன்னாள் உதவி அரசாங்க அதிபர் இ. சிவபுண்ணியம் அறிமுகவுரையையும் ஆற்றவுள்ளனர். இந்த நிகழ்வில் தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலையின் முன்னாள் ஆசிரியர்களான திருமதி கி.செல்வராஜா, பொ.வேலாயுதம், மு.வேலாயுதம்பிள்ளை ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (204)

அமெரிக்கன் மிஷன் இலங்கைத் திருச்சபைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம்

யாழ் அமெரிக்கன் மிஷன் இலங்கைத் திருச்சபைக்கு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக

நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அண்மையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

தமிழ் பேசும் மக்களின் இன்றைய நிலைப்பாடு, அவர்களது எதிர்கால வாழ்க்கை தொடர்பிலான முன்னேற்பாடுகள், குடாநாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்படப் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இதில் கலந்துரையாடிய அமைச்சர் மக்கள் எழுப்பிய வினாக்களுக்கும் பதிலளித்தார்.

வடமாகாணத்தின் துரித அபிவிருத்திக்கான முன்னேற்பாடுகள் தொடர்பில் தான் திட்டமிட்டு வருகின்ற வேலைத் திட்டங்களை எடுத்து விளக்கிய அமைச்சர் 20 வருடகால அழிவை இன்னும் இரு வருடங்களில் கட்டியெழுப்புவதற்கு தான் உத்தேசித்துள்ள திட்டங்கள் குறித்தும் எடுத்து விளக்கினார்.

மக்களின் பங்களிப்புக்களுடன் தான் மேற்கொண்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் அம்மக்களுக்கு உயரிய பயனை அளித்து வருவதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடையும் அதேவேளை இதுபோன்ற வேலைத்திட்டங்கள் குடாநாட்டின் அனைத்து மக்களுக்கும் கிடைக்கக் கூடிய வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பதே தனது நோக்கமாகும் என்பதையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார். (203)

சமய சந்திகளிலும்

யாழ்ப்பாணம், ஜூலை11

சாவகச்சேரி விளைவேலி துர்க்கை அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204- 207)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை11

பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலய கும்பாபிசேஷக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு மூலமூர்த்திக்கு 1008 சங்காபிசேகமும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிசேகமும் நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார். (204- 78)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை11

காரைநகர், வியாவில் பூரணை பொற்கலை சமேத ஐயனார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர் வெள்ளோட்டமும், 20 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

500 வருடங்களுக்குப் பின்னர் இந்த வருடம் இந்த ஆலயத் திருவிழா இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (204- 111= 78)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை11

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய ருத்திராகார சித்திரத் தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் ஆறு. திருமுருகன் ஆகியோரின் சிறப்புரையும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை11

யாழ். வண்ணை, கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

குடாநாட்டின் பிரதேச செய்திகள்

உள்ளூராட்சி வார நிகழ்வு தங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

உள்ளூராட்சி சபைகளில் இவ்வருட உள்ளூராட்சி வார நிகழ்வு நாளை மறுதினம் 13 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை அனுஷ்டிக்குமாறு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் எச்.பி.கெஷியன் ஹேரத் சகல உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளார்.

''வினைத்திறன் மிக்க உள்ளூராட்சி சேவைகளினூடாக நட்புமிக நாடு வளம்மிகு நாளை'' என்னும் தொனிப் பொருளுடன் இவ்வருட உள்ளூராட்சி விழா நிகழ்வுகளை அனுஷ்டிக்குமாறும் அறிவித்துள்ளார்.

13 ஆம் திகதி சுகாதார நாளாகவும் 14 ஆம் திகதி கல்வி, நூல் நிலைய அபிவிருத்தி, விளையாட்டு நாளாகவும் 15 ஆம் திகதி சுற்றாடல் நாளாகவும் 16 ஆம் திகதி அபிவிருத்தி செயற்றிட்டங்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் நாளாகவும் 17 ஆம் திகதி மக்கள்பயன்பாட்டு நாளாகவும், 18 ஆம் திகதி தகவல் தொழில்நுட்பமும் தொடர்பாடலும் நாளாகவும் 19 ஆம் திகதி உள்ளூராட்சி வார இறுதி நாளாகவும் அனுஷ்டிக்குமாறும் அறிவித்துள்ளார். (203-207)

நாமே பயிரிடுவோம் நாட்டை முன்னேற்றுவோம் உள்நாட்டு உணவு ஊக்குவிக்கும் உணவு வாரத்தை முன்னிட்டு குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்ற நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பாடசாலை மாணவர்களால் மாதுளை மரக்கன்று நடுகை செய்யப்படுவதை முதலாவது படத்தில் காணலாம். சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் பணிமனையில் சிரமதானம் நடைபெறுவதை இரண்டாவது படத்திலும் கரவெட்டி விவசாய போதனாசிரியர் வீட்டுத் தோட்டப் பயனாளி ஒருவருக்கு விவசாய உள்ளீடுகளை வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பண்ணை பெண்கள் சிரியாக்க அலுவலரினால் உள்ளூர் உணவு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுவதை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.க.கணபதிப்பிள்ளை தவகீஸ்வரன்
B.A (HONS), DIP.IN.ED.,M.ED
இலங்கை அதிபர் சேவை - 2 - II

திரு.க.தவகீஸ்வரன் அவர்கள் எமது பாடசாலை யில் ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்திற்கு அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளமையைப் பாராட்டுவதுடன் இவரது பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/சென்.மேரிஸ் வித்தியாலயம் (O.L.R)

(86915)

வீதி சேதம்

வலி.வடக்கு, ஜூலை 11

யாழ்.இந்து மகளிர் கல்லூரிச் சந்தி மிகவும் சேதம் அடைந்து போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது.

நாளாந்தம் பிறவுன் வீதியாலும் அரசடி வீதியாலும் பலநூற்றுக்கணக்கானவர்கள் வாகனங்களில் பயணம் செய்து வருவதுடன் பாதசாரிகளும் பயணம் செய்து வருகின்றனர்.

அரசடி வீதியும் பிறவுண் வீதியும் சந்திக்கும் இந்தச் சந்தி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மழை காலத்துக்கு முன்னர் இந்தச் சந்தி திருத்தப் படாத பட்சத்தில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை தோன்றும்.

பெரும் எண்ணிக்கையானோர் பயணம் செய்யும் இந்த வீதியை புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(203-86)

சேவைநலன் பாராட்டு

திரு.தர்மலிங்கம் யோகேஸ்வரன்
(பயிற்றப்பட்ட ஆசிரியர்- கணிதம்)

யா/இணுவில் மத்திய கல்லூரியில் கணித ஆசிரியராகக் கடந்த 22 வருடகாலம் சேவையாற்றி இன்று (11.07.2009)இல் சேவையிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

சேவையாற்றியபாடசாலைகள்	காலம்
* நு/கிளைஸ்டேல் தமிழ் வித்தியாலயம்	1 வருடம்
* நு/சன்றிங்காம் தோட்ட தமிழ் வித்தியாலயம்	6 வருடம்
* நு/சன்றிங்காம் அரசினர் தமிழ் வித்தியாலயம்	3 வருடம்
* யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை	2 வருடம்
* யா/வசாவிளான் ம.ம.வித்தியாலயம்	2 வருடம்
* யா/இணுவில் மத்திய கல்லூரி	22 வருடம்

ஆசிரிய சேவையில் 36 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள இவர் ஓய்வுகாலத்தில்குடும்பத் தவர்களுடன் நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
யா/இணுவில் மத்தியகல்லூரி.

(8916)

மாவட்டச் செயலகம்- யாழ்ப்பாணம்

கேள்வி அறிவித்தல்

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டம்
180 நாள்கள் துரித அபிவிருத்தித் திட்டம்- 2009

மேற்படி திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள பின்வரும் வீதி வேலைகளுக்குத் தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

இல.	ஒப்பந்தத்தின் பெயர்	இக்ராட் பதிவு	மீளளிக்கப்படாத பிணைப்பணம்	மீளளிக்கப்படும் பிணைப்பணம்
01.	மீசாலை வரணி வீதி (0.00- 1.75 கி.மீற்.)	M-6 (வீதிகள்)	1,000.00	40,000.00
02.	புங்குடுதீவு ஆஸ்பத்திரி வீதி (0.00- 1.10 கி.மீற்.)	M-7 (வீதிகள்)	500.00	20,000.00
03.	சங்கரத்தை குள வீதி (0.00- 0.40 கி.மீற்.)	M-7 (வீதிகள்)	500.00	20,000.00
04.	மிருசுவில் உசன் கெற்பலி வீதி (0.00- 3.62 கி.மீற்.)	M-7 (வீதிகள்)	500.00	30,000.00
05.	சுழிபுரம் பறாளாய் வீதி (2.11- 2.70 கி.மீற்.)	M-7 (வீதிகள்)	500.00	20,000.00
06.	பாலாவோடை ஊரி வீதி (0.00- 5.63 கி.மீற்.)	M-7 (வீதிகள்)	750.00	30,000.00
07.	கச்சாய் கெற்பலி- ஆனையிறவு வீதி (1.40- 2.250 கி.மீற்.)	M-7 (வீதிகள்)	750.00	30,000.00
08.	ஏழாலை கட்டுவன் வீதி (0.00- 1.735 கி.மீற்.)	M-6 (வீதிகள்)	1,000.00	35,000.00
09.	கோண்டாவில் இருபாலை வீதி (4.40- 5.30 கி.மீற்.)	M-7 (வீதிகள்)	750 00	30,000.00
10.	அல்லைப்பிட்டி வீதி (0.00- 750 மீற்.)	M-8 (வீதிகள்)	250.00	5,000.00

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர், பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. ICTAD வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

III. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருத்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

IV. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரர் தனது புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

V. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விவரங்களை வேலை நாள்களில் முற்பகல் 8.30இல் இருந்து பிற்பகல் 4.15 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

VI. ஆங்கில மொழியிலான ஒப்பந்த ஆவணங்களை 13.07.2009 முதல் 27.07.2009 வரை வேலை நாள்களில் முற்பகல் 9 மணியில் இருந்து பிற்பகல் 3 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறி யியலாளர் அலுவலகத்தில் மேலே அட்டவணையில் காட்டப்பட்டவாறு மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும் கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

VII. அந்தந்த வேலைக்குரிய பொறி வைத்த கேள்விகள் தலைவர், பிராந்திய கேள்விச் சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு 28.07.2009 முற்பகல் 10.30 மணிக்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். இதன் பின்னர் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கூறு விலை திறக்கப்படும் நேரத்தில் கூறுவிலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

VIII. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் கருநர் பொறுப்பேற்கமாட்டார்.

திரு.கே.கணேஷ்,
தலைவர்,
மாவட்ட கேள்விச் சபை.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
10.07.2009.

(சி/559469)

10ஆவது பிறந்தநாள் வாழ்த்து

மந்துவில் வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த
திருநாவுக்கரசு (குஞ்சு)-
அகிலாதேவி (ரஞ்சன்)
தம்பதியரின் நான்காவது செல்வப் புதல்வி
செல்வி அமிர்த்தா (சோதிகா)
(யா/மந்துவில் சிறி பாரதி வித்தியாலய 4ஆம் ஆண்டு மாணவி) அவர்களின் 10ஆவது பிறந்தநாளான இன்று (11.07.2009) இல் இவரை அன்புடன் வாழ்த்துவோர்:
முத்துச் சித்தப்பா (சவூதி),
வன்னியசிங்கம் மாமா
(C.T.B. சாரதி- பருத்தித்துறை),
குகன் அண்ணா
(தவில் வித்துவான்),
அக்காமார்களான தர்சி,அனிற்றா, ஆசா,
ஆகாஸ் (தம்பி) மற்றும் அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் ஆகியோர் முத்துமாரி அம்மன் அருள்பெற்று வாழ வாழ்த்துகிறார்கள்.

மந்துவில் வடக்கு, கொடிகாமம். கி.திருநாவுக்கரசு (தந்தை-குஞ்சு).

(86917)

விலைக் கேள்விகளுக்கான கோருதல் இல.11

பிரதம பொறியியலாளர் அலுவலகம்
கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்

1. சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சார்பில் தவிசாளர், பிராந்திய பெறுகைக் குழு அவர்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைக்கான தகவுடைய மற்றும் தகைமை பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து மூடிக் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகிறார்.
2. கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வி நடைமுறைப்படி நடத்தப்படும்.
3. ஒப்பந்த வழங்கலிற்குத் தகுதி பெறுவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலிடப்படாதவராகவும், நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தில் கட்டட நிர்மாணத் துறையில் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்கான குறித்த பதிவை அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த வழங்கலிற்கான தகைமையைப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தின் பகுதி 4இலும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வித் தரவிலும் (பகுதி 5) கொடுக்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் (தொ.பே.சி., தொலைநகல் இல. 021 222 2634) இலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் விலைக்கேள்வி ஆவணங்கள் மேற்கூறிய முகவரியில் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000.00ஐ பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில் பணமாகச் செலுத்துவதன் மூலம் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), யாழ்ப்பாணத்தில் 13.07.2009ஆம் திகதியிலிருந்து 24.07.2009ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணிவரை ஆங்கிலமொழியிலான பூரண தொகுதி கேள்வி ஆவணம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் இரண்டு பிரதிகளில் கீழ்வரும் முகவரியில் 27.07.2009ஆம் திகதியன்று பி.ப.3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராகப் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படல்வேண்டும். காலந் தாழ்த்திச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகவே வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரநிதிகளது சமூகத்தில் திறக்கப்படும்.

ஒப்பந்த இலக்கம்	வேலை விவரம்	மதிப்பிடப் பட்ட செலவு (மில்லியன்)	ஒப்பந்த காலம்	தேவையான ICTAD தரம்	விலைக்கேள்வி பிணைப் பொறுப்பு	
					பிணைத் தொகை	செல்லுபடியாகும் காலம்
JF/BD/CE/HS/14/2009	ஆயுள்வேத மத்திய மருந்தகம், நிர்மாணித்தல், மூளாய்.	4.1	90 நாள்கள்	M7/C8	41,100.00	26.10.2009

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்,
கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.: 021 222 2632

எந்திரி க.குகநேசன்,
தவிசாளர், பிராந்திய பெறுகைக் குழு/
பிரதம பொறியியலாளர்,
கட்டடங்கள் திணைக்களம்.

(சி/559470)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை கலை இலக்கிய சங்க நிகழ்வின்போது பிரதம விருத்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய "ஞானம்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரன், சங்கத் தலைவர் சைவப்புலவர் பொன்.சுகந்தனால் கௌரவிக்கப்படுவதனைப் படத்தில் காணலாம்.

மக்கள் முகம்

கிராமிய கைத்தொழில் சுயதொழில் அபிவிருத்தி அமைச்சின் தேசிய அருங்கலைகள் பேரவையினால் காளிகோயிலடி, சங்கானையைச் சேர்ந்த வடிவேலு பத்மநாதனுக்கு 2007 ஆம் ஆண்டுக்கான கைவினை உற்பத்திகளுக்கான தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டிற்கான இவ்விருது அண்மையில் வலி. மேற்கு பிரதேச சபை செயலாளரினால் இவருக்கு வழங்கப்பட்டது. அத்துடன் 5 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையும் வழங்கப்பட்டது. இடியப்பம், முறுக்கு ஆகியன செய்வதற்கு நவீன முறையில் இவரால் அமைக்கப்பட்ட உரல் இந்த விருதுக்குத் தெரிவானமை குறிப்பிடத்தக்கது. (29)

* * *

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் உலக சுற்றாடல் தினத்தையொட்டி நடத்தப்பட்ட திறந்த புகைப்படப் போட்டியில் தென்மராட்சி கல்வி வலய பாடசாலை ஆசிரியைக்கு மாகாண மட்டத்தில் இரண்டாமிடம் கிடைத்துள்ளது.

பளை, வேம்பொருகேணி சி.சி.த.க.பாடசாலையில் கடமையாற்றி தற்போது மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தற்காலிக இணைப்புப் பெற்று கடமையாற்றும் செல்வி சரஸ்வதி கிருஷ்ணபிள்ளையின் 'இலங்கையின் சுற்றாடல் வளர்ப்பு' என்னும் புகைப்படம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் இவருக்குப் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியமைக்கான புகைப்படப் புத்தகமும் வழங்கப்பட்டன.

* * *

தென்மராட்சி கல்வி வலயத்தின் உடற்கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராக க.சிவகோசரியார் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய க.யோகநாதன் ஓய்வுபெற்றதையடுத்து புதிய உதவிக் கல்விப் பணிப்பாளராக க.சிவகோசரியார் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (203-207)

* * *

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தராக என்.மோகனதாஸ் பதவியேற்றுள்ளார்.

முன்னர் பதில் நிர்வாக உத்தயோகத்தராக கடமையாற்றிய இவர் நிர்வாக உத்தியோகத்தராகப் பதவியேற்றுள்ளார். (224)

* * *

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மீசாலை விக்கேஸ்வரா மகா வித்தியாலய அதிபராக தம்பிராசா அம்பலவாணர் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் வித்தியாலய அதிபர் கு.கதிர்காமசேகரர் இளைப்பாறியதையடுத்து கைதடி-நுணாவில் அ.த.க.பாடசாலையில் கடமையாற்றிய த. அம்பலவாணர் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (203-207)

எப் போட்டியானாலும் அது ஒழுங்காக நடத்தப்பட வேண்டும்

மக்கள் மன்றம்

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகளில் ஏற்பட்ட குளறுபடிகள் சம்பந்தமான ஒரு கண்ணோட்டம் 'உதயன்' பத்திரிகையில் வெளிவந்திருந்தது. சாதாரண போட்டிகளை விட தமிழ்த்தினப் போட்டிகளுக்கு கூடிய முக்கியத்துவம் உள்ளதும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எப்போட்டியாயினும் அது ஒழுங்காக நடத்தப்பட வேண்டியது அவசியம். குளறுபடி நடப்பது வழமையான விடயம்தானே என்று சாதாரணமாகப் பலரும் கருதும் நிலைமைக்கு போட்டிகளின் நிலைமை வந்துவிட்டது. இவற்றிற்குப் பொறுப்பானவர்கள் சமூகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டிய ஆசிரியர்கள் என்னும்போது கவலை அதிகரிக்கின்றது.

மிகச் சாதாரணமாக எவரும் உணர்ந்து கொள்ளக் கூடிய பிழைகளை விடுவது வழமையாகிவிட்டது. நீதியின் பால்நின்று சம்பந்தப்பட்டவர்கள் ஏற்கக் கூடியவாறு செயற்படுவதை விட்டுவிட்டு அதிகாரத்தின் மூலம் திணிக்க முற்படுவது கூடாது. பிழை நடைபெற்ற பின் மூடி மறைக்கப்படுவது சாதாரணமாக இடம்பெறும் காரணத்தால் எந்த முறைப்பாடும் எடுபடாது.

சாதாரண கற்பித்தலில் என்றாலும் சரி நிர்வாகத்தில் என்றாலும் சரி எல்லாவற்றையும் சரியென்று எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற மனோபாவம் உள்ள ஆசிரியர்கள் எந்தப் பொறுப்புக்குப் போனாலும் மீண்டும் மீண்டும் தவறையே செய்கிறார்கள். இன்னொரு விடயம் முறைப்பாட்டுக்கு பதில் அதிகாரத்தனம் வாய்ந்த எதிர்மறைச்செயற்பாடாக இருக்குமே தவிர ஏற்றுக் கொள்வதற்குக் கொடுதத விளக்கமாக இருக்காது.

இருவேறு கட்டங்களில் நடைபெற்ற இரு விடயங்களைக் குறிப்பிடலாம். ஏற்பாட்டில் உள்ள தவறினால் இடவசதியின்மை காரணமாக சில போட்டிக்குழுக்கள் பாதிக்கப்பட்டதை பார்வையாளராக வந்த பெற்றோர்களில் ஒருவர் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து எல்லாப் பெற்றோர்களும் வளாகத்திலிருந்து வெளியேற்றப்படடு போட்டி தொடர்ந்து நடத்தப்பட்டது.

மேலதிக வகுப்பு நடைபெற்றவேளை பிள்ளையைக் கூட்டிச் செல்லவந்த பெற்றோர் பிள்ளைகள் வகுப்பறையில் விளையாடிக் கொண்டிருந்ததை அவதானித்து பிள்ளையைக் கூட்டிச் செல்ல ஒரு ஆசிரியரிடம் அனுமதி கேட்டார். இதனால் கோபமடைந்த அதிபர் அந்தப் பிள்ளையை (பெற்றோரையல்ல) அடிக்கடி இதை ஞாபகமூட்டி ரெண்டல் செய்து கொண்டேயிருக்கிறார்.

அன்றாடம் மேற்படி விடயங்களையும் இன்னோரன்ன பிற விடயங்களையும் நீதிக்கு மாறாக அரங்கேற்றிக் கொண்டிருக்கும் ஆசிரிய சமூகம் ஒழுங்காகப் போட்டிகளை நடத்துமா என்பது சந்தேகம். ஏற்பாட்டில் பாரிய மாற்றங்கள் இல்லாவிட்டால் போட்டிகள் ஒழுங்காக நடைபெறுவது சாத்தியமில்லை. நடுவர் நியமனத்திலாவது சம்பந்தமில்லாதவர்களை நியமிக்கும் திட்டம் வேண்டும்.

உயர் கல்வி நிறுவன மாணவர் பலர் வேற்றுநாட்டு ஆசிரியர்களைக் கொண்டுதான் பரீட்சை நடத்தப்பட வேண்டுமென்று போராட்டம் நடத்துவதாக [illegible] நாட்டில்தான் நடைபெற்றது. இது எங்கே போய் முடியும்.

கொக்குவில். வை.சிந்துஜன்.

செய்திச்சரம்.....செய்திச்சரம்

சாவகச்சேரி நகர சபையால் நூலக வாசகரிடையே பொது அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை 11

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினர் நூலக வாசகர்களிடையே பொது அறிவுப் போட்டியினை எதிர்வரும் 18 ஆம் திகதி நடத்தவுள்ளனர்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் வாசகர்கள் சாவகச்சேரி பிரதான பொது நூலகம், மீசாலை, நுணாவில் கிளை நூலகங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (203-207)

வலிகாமம் வலயத்தில் பாட அடைவை மேம்படுத்த விசேட செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 11

வலிகாமம் கல்வி வலயத்தில் வரலாற்றுப் பாட அடைவை மேம்படுத்தும் பொருட்டு விசேட செயற்றிட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வலயத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவினர் மேற்படி பாட அடைவை உயர்த்தும் வகையில் மதிப்பீட்டுப் பரீட்சைகளைத் தேர்ச்சி அடிப்படையில் நடத்தவுள்ளனர்.

இதன்படி ஐந்து மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (203-38)

நலன்புரி நிலைய ஆசிரியருக்கு பயிற்சித் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

கைதடி நலன்புரி நிலைய பாடசாலை ஆசிரியர்களுக்கான "ஆரோக்கியமான பாடசாலை சூழலை கட்டியெழுப்புவோம்" என்னும் பயிற்சித்திட்டம் அண்மையில் இடம்பெற்றது.

ஒன்பது தினங்கள் தொடர்ந்து பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

'ஆறுதல்' நிறுவன அனுசரணையுடன் இப் பயிற்சி வகுப்புகள் தென்மராட்சி கல்வி வலய ஆளணியினரால் நடத்தப்பட்டது. (203-207)

சட்ட விரோதமாக மணல் ஏற்றிய நபருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம் , ஜூலை11

சாரதி உரிமம் இன்றி சட்ட விரோதமாக மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தின் சாரதியை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றியமை, சாரதி உரிமம் இன்மை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் சாரதிக்கு எதிராக பொலிஸார் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

கடந்த வியாழக்கிழமை இவ் வழக்குகளை விசாரித்த நீதிவான் இரு குற்றங்களுக்காகவும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (203- 207)

நீர்வேலியில் மின்தடை மக்கள் விசனம்

கோப்பாய், ஜூலை 11

நீர்வேலி மேற்குப் பிரதேசத்தில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு வேளையில் ஏற்படும் மின்தடை மறுநாள் காலையிலேயே சீர்செய்யப்படுவதாகவும் இதனால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்பகுதியில் சட்டவிரோத மின்னிணைப்பு அதிகளவில் ஏற்படுவதால் மின்வலு மேலும் குறைவடைந்து அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (203-72)

பாவனைக்கு வீதி திறக்கப்படாமையால் பொதுமக்கள் சிரமத்தின் மத்தியில்

யாழ்ப்பாணம்,ஜூலை 11

வரணி படை முகாமுக்கு முன்பாக உள்ள பருத்தித்துறை-கொடிகாமம் வீதி பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடாததால் முகாமுக்கு முன்பாக உள்ள மணல் வீதியில் சிரமங்களுக்கு மத்தியில் பயணம் மேற்கொள்வதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்ட பல வீதிகள் அண்மையில் திறந்து விடப்பட்ட போதிலும் இவ் வீதி இன்னும் திறக்கப்படாதது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது. (203-207)

நாயுடன் மோ. சைக்கிள் மோதி தூக்கி வீசப்பட்டவர் காயம்

யாழ்ப்பாணம் , ஜூலை11

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தூக்கி வீசப்பட்டு இளைஞர் காயமடைந்தார்.

இச் சம்பவம் கல்வயலில் இடம்பெற்றது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வை. லக்ஸனன் (வயது 18) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலயில் சிகிச்சை பெற்று வருகிறார். (203- 207)

தீவுப் பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் உபகரணம்

நெடுந்தீவு,ஜூலை 11

புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவுப் பகுதிகளைச் சேர்ந்த 14 விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களும் 10 விவசாயிகளுக்கு தெளி கருவிகளும் 50 வீத மானியத்துடன் வழங்கப்படவுள்ளதாக புங்குடுதீவு விவசாய போதனாசிரியர் பொ.பத்மநாதன் தெரிவித்தார். (203-111)

அபிவிருத்திக் கூட்டங்கள்

நவாலி, ஜூலை 11

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் விவசாயக் குழுக்கூட்டமும் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாடடு மண்டபத்தில் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தலைமையில் இடம்பெறும்.

விவசாயக்குழுக்கூட்டம் மு.ப 10மணிக்கும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் 11 மணிக்கும் இடம்பெறுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-100)

கிராம அபி. சங்கங்களுக்கு தொழில் வாய்ப்புக்கு உதவி

நல்லூர் , ஜூலை11

புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவுப் பகுதிகளில் இயங்கும் மகளிர் சிராம அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்களது தொழில் வாய்ப்பையும் வருமானத்தையும் மேம்படுத்தக் கூடியதாக சிறிய அரிசி அரைக்கும் ஆலைக்கான இயந்திரங்கள் ஒவ்வொரு தீவுக்கும் ஒவ்வொன்று வீதம் வழங்க விவசாயத் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இத்தகவலை புங்குடுதீவு கமநல சேவைகள் போதனாசிரியர் பொ. பத்மநாதன் தெரிவித்தார். (203- 111)

மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வலி.தென் மேற்கில் மூக்குக்கண்ணாடி

நவாலி, ஜூலை11

வசதியற்ற குடும்பங்களை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்டு அறிவித்தல் கொடுத்தும் இதுவரை இவற் றைப் பெற்றுக் கொள்ளாதவர்களை உடன் வந்து பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார்.

அத்துடன் இத் திட்டத்தின் கீழ் பழமரக்கன்றுகளை பெற்றுக் கொள்ளுமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பயனாளிகளும் உடன் வந்து பெற்றுச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203 - 100)

விசேட கல்வி ஆசியருக்கு பயிற்சிச் செயலமர்வு

கோப்பாய், ஜூலை 11

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளின் விசேட கல்வி பொறுப்பாசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு இன்று சனிக்கிழமை நல்லூர் ஸ்தான சி.சி.பாடசாலையில் இடம்பெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (203-72)

நீர்வேலி றோ.க. மைதானத்துக்குக் காணி

கோப்பாய், ஜூலை11

நீர்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் விளையாட்டு மைதான விரிவாக்கத்திற்கு 6 லட்சம் ரூபா பெறுமதியான காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நிதியினை இப்பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள், நலன்விரும்பிகள் மற்றும் வெளிநாட்டில் வதியும் பழைய மாணவர்கள் ஆகியோர் சேர்ந்து பங்களிப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள் தரும் பதிவுகள்

வலி.மேற்குப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் வட்டுக்கோட்டை பொதுநூலகத்தில் தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் வருடாந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதேச சபை செயலாளர் அ.புத்திரசிகாமணிக்கு நூலகர் மாலை அணிவித்தபோது எடுக்கப் பட்ட படம். (படம்: இராசுதா)



புன்னாலைக் கட்டுவன் வடக்கு, திடற்புலம் ஒளிநிலா விளையாட்டுக்கழக மைதானத்தில் சிரமதானப் பணிகள் நடை பெறுவதைப் படத்தில் காணலாம். (படம்: கலைஞன்)

யாழ்.செயலக நலன்புரிக் கழகத் தலைவர் ம.வித்தியானந்தநேசனால் எழுதி வெளியீடு செய்யப்பட்ட 'சிக்கலெண்கள்' எனும் உயர்தர கணித நூல்களை தற்போது இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்களின் கல்வியினை மேம்படுத்தும் பொருட்டு யாழ்.அரச அதிபர் க.கணேஷிடம் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் தென்மராட்சி கிழக்குப் பாடசாலைகளின் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட லயன்ஸ் கழகங்களின் வட பிராந்திய பிரதிப் பொருளாளர் லயன். எஸ்.எஸ். தங்கராஜா மாணவனுக்குப் பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம். (218)

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் அதிபராகப் பணியாற்றி இளைப்பாறியுள்ள ம.குட்டித்தம்பிக்கு கல்லூரிச் சமூகம் நடத்திய சேவை நயப்பு விழாவில் புதிய அதிபர் எம்.நவநீதமணி மாலைசூட்டி கௌரவிப்பதையும் அருகில் திருமதி குட்டித்தம்பி அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)

இளவாலை திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்பட்ட கலைக் கண்காட்சியினை இளவாலை ஜே /155 கிராம சேவகர் எஸ். நாகராஜா நாடாவெட்டித் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரால் போதைப்பொருள் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விழிப்புணர்வுப் போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு பரிசில் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். (301)

நவாலி ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிறுவனத்தில் முன்பள்ளிச் சிறுவர்களின் சிறுவர்சங்கம் நிகழ்வில் சிறுவர்கள் நடனமாடுவதைப் படத்தில் காணலாம். (302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த இதழியல் விருதுகள் வழங்கும் பத்தாவது ஆண்டு வைபவம் எதிர்வரும் செவ்வாயன்று கொழும்பில் நடைபெறுகிறது

இந்தியாவின் அருணா றோய் பிரதம விருந்தினர்

கொழும்பு,ஜூலை11

இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் கழகம் இலங்கைப் பத்திரிகை நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருக்கும் இவ்வருடத்துக்கான சிறந்த இதழியல் செயற்பாடுகளுக்கான விருதுகள் வழங்கும் வைபவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை மவுண்ட்லவினியா ஹோட்டலில் "கிராண்ட் போல் ரூமில்" நடைபெறவிருக்கிறது.

தொடர்ச்சியாகப் பத்தாவது வருடமாக நடத்தப்படுகின்ற இந்த வைபவம் இதழியல் துறையில் தொழில்சார் நிபுணத்துவத்தை அங்கீகரிப்பதையும் குறிப்பிட்ட ஓர் ஆண்டின்போது அத்துறையில் சிறப்பான செயற்பாடுகளுக்காக விருது வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டது.

400இற்கும் அதிகமான விருந்தினர்கள் வரவழைக்கப்பட்டிருக்கும் இந்த கோலாகலமான வைபவத்தில் 2008இல் இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகத் தங்கள் சேவைகளை வழங்கியவர்களும், கடமையின்போது தனது உயிரைப் பறிகொடுத்த ஒரு செய்தியாளர் உட்பட, தங்களது தொழில்சார் கடமைகளைப் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் செய்தவர்களையும் நினைவுகூருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட வருடத்துக்கான சிறந்த மோவின் டி சில்வா பத்திரிகையாளர் விருது, சிறப்பம்ச எழுத்துத் துறைக்கான உபாலி விஜயவர்தனா விருது, நெருக்கடியான சூழ்நிலைகளில் செய்திகளை அறிக்கையிடுவதற்கான பேராசிரியர் கே.கைலாசபதி விருது, குறிப்பிட்ட வருடத்துக்கான சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ.சிறிவர்தன விருது, சமூகப் பொறுப்புணர்ச்சியுடனான செய்தி அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது உட்பட பல விருதுகள் வைபவத்தில் வழங்கப்படவிருக்கின்றன. ஊடகத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களையும் கல்விமான்களையும் உள்ளடக்கிய சுயாதீனமான நடுவர் குழுவொன்றினால் விருதுகளுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

சேபால குணசேன விருது மற்றும் டி.ஆர்.விஜயவர்தனா விருதுகளுக்குரியவர்கள் கூட்டு ஒழுங்கமைப்புக் குழுவினால் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இளம் செய்தியாளர்களுக்கான டென்சிஸ் பீரிஸ் விருதைப் பெறுபவருக்கு முழுமையான புலமைப் பரிசிலை வழங்குவதற்கான அனுசரணையை இவ்வருடம் லக்ஷ்மன் கதிர்காமர் பவுண்டேசன் வழங்கும்.

இவ்வருட விருது வழங்கல் வைபவத்தில் பிரதம அதிதியாக இந்தியாவின் பிரபல்யமான சமூக செயற்பாட்டாளரான திருமதி அருணா றோய் கலந்துகொள்கிறார். இவர் இந்திய நிர்வாக சேவையில் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி றோய் 2000ஆம் ஆண்டு சமூகத் தலைமைத்துவத்துக்கான ரமோன் மக்சேசே விருதைப் பெற்றிருக்கிறார். (சி)

மட்டக்களப்பில் புலி உறுப்பினர்கள் இருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு,ஜூலை11

மட்டக்களப்பு மாமங்கம் மற்றும் கொக்குவில் பிரதேசங்களில் வைத்து விடுதலைப் புலிகளின் புலனாய்வு மற்றும் கடற்புலி உறுப்பினர்கள் என இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 10 கிலோ எடையுடைய பாரிய அமுக்கவெடி மற்றும் ஹையேஸ் ரக வான் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரி ராஜா உதயங்க தெரிவித்தார்.

புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த தங்கராசா தனபாலன் (தனபால) கடற்புலி உறுப்பினர் முத்துக்குமார் அழகேஸ்வர ராஜா (ஈஸ்வரன்) ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாமங்கத்தில் தனபாலன் மறைத்து வைத்திருந்த 10 கிலோ பாரிய அமுக்க வெடியை பொலிஸார் மீட்டுள்ளனர். இவர்கள் இருவரும் கண்டியிலுள்ள ஒருவருக்கு விற்பனை செய்திருந்த ஹையேஸ் வானும் கண்டுபிடிக்கப்பட்டு, மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

உள்நாட்டு விமான சேவைக் கட்டணங்கள் குறையும் சாத்தியம் தற்போதைக்கு இல்லை

கொழும்பு,ஜூலை11

உள்நாட்டு விமான சேவைக் கட்டணங்களைக் குறைப்பதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன - என்று தனியார் விமான சேவை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அரசால் விதிக்கப்படும் வரி மற்றும் ஏனைய கட்டணங்களால் விமானக் கட்டணத்தை குறைக்கக்கூடிய சாத்தியம் இல்லை எனவும் அந்த நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

சிவில் விமான போக்குவரத்து அதிகார சபைக்கும், தனியார் விமான போக்குவரத்து நிறுவனங்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போதே இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கட்டணங்களைக் குறைக்குமாறு தாம் தனியார் விமான நிறுவனங்களிடம் கோரினார் என சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வரி அறவீடுகளின் காரணமாகவே விமானக் கட்டணங்கள் மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது என தனியார் விமான சேவை நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

எனவே, வரி அறவீடுகள் குறைக்கப்படும் வரையில் விமானக் கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தக்கூடிய சாத்தியமில்லை என தனியார் விமான சேவை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

விமானக் கட்டணங்களை குறைப்பது தொடர்பில் மேலும் ஒரு சுற்றுப் பேச்சு நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

இலவச கண் பரிசோதனை

யாழ்ப்பாணம்,ஜூலை11

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஆரம்பமாகியது.

பாடசாலைகளில் பார்வையில் குறைபாடு காணப்படும் மாணவ, மாணவிகள் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டனர்.

பார்வையில் குறைபாடு காணப்படும் மாணவர்கள் கண்சத்திர சிகிச்சை நிபுணர் மூலம் தெரிவுசெய்யப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலயமும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து கண் பரிசோதனை முகாமினை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

தென்மராட்சி வலய புராண படனப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை11

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட புராண படனப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் முதலிடத்தையும் மீசாலை வீரசிங்கம் ம.வி. இரண்டாமிடத்தையும், கைதடி - நாவற்குழி அ.த.க. படசாலை மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கச்சாய் அ.த.க. பாடசாலை, மீசாலை விக்னேஸ்வராக ம.வி. ஆகியவை சிறப்புத் தேர்ச்சியினையும் நாவற்குழி ம.வி., கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி., சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மிருசுவில் அ.த.க. பாடசாலை ஆகியவை தேர்ச்சியினையும் பெற்றுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (203-207)

உள்ளூராட்சி வாரம் தொடர்பான கலந்துரையாடல்

யாழப்பாணம்,ஜூலை11

சாவகச்சேரி நகரசபையினர் உள்ளூராட்சி வாரம் - 2009 தொடர்பாக சபை எல்லைக்குட்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடலை நடத்தவுள்ளனர்.

இன்று முற்பகல் 10 மணிக்கு நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெறும் கலந்துரையாடலுக்கு அனைத்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (203-207)

முல்லை, புதுக்குடியிருப்பில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,ஜூலை11

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு, விசுவமடு பிரதேசங்களில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

5 ஆயிரம் துப்பாக்கி ரவைகள், ஆயிரத்து 250 மோட்டார் குண்டுகள், அதிசக்தி வாய்ந்த வெடிகுண்டுகள உட்பட பெருமளவு ஆயுதங்களைப் படையினர் மீட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி பிரதேசங்களில் பாதுகாப்புப் படையினர் பெரும் தேடுதல் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் எட்டாவது அதிரடிப் படையினர் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நடத்திய தேடுதலின்போது, ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 5 ஆயிரம், 60 மி.மிற்றர் மோட்டார் குண்டு 40, 80 மி.மீற்றர் ரக மோட்டார் குண்டுகள் மற்றும் கைக்குண்டுகளையும் மீட்டெடுத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு மேற்குப் பகுதியில் இராணுவத்தின் இரண்டாவது அதிரடிப் படையினர் நடத்திய தேடுதலில் 81 மி.மீற்றர் ரக மோட்டார் குண்டுகள் 550, 60 மி.மீற்றர் மோட்டார் குண்டுகள் 468, 120 மி.மீற்றர் மோட்டார் குண்டுகள் 330, 12.7 மி.மீற்றர் ரவகைள் 470, வெடிமருந்து 400 கிராம் மற்றும் ஆயுதங்களைப் படையினர் மீட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

இன்னும் ஒரு வருடத்துக்குள் யாழ்ப்பாணத்துக்கு ரயில் சேவை

போக்குவரத்து அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு,ஜூலை11

எதிர்வரும் ஒரு வருட் காலப்பகுதிக்குள் யாழ்.தேவி ரயில் யாழ்ப்பாணம வரை தனது ரயில் பயணத்தை மேற்கொள்ளும் - என்று போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏர்ல் குணசேகர எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

தற்போது அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ரயில் சேவையினை யாழ்ப்பாணம்வரை நீடிப்பதற்கு முன்னர் சொகுசு பஸ் சேவைகளை யாழ்ப்பாணம்வரையில் சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் இலங்கை போக்குவரத்து சபை டிப்போவை நாட்டில் சிறந்த டிப்போவாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த டிப்போ இந்த வருட இறுதிக்குள் தரமுயர்த்தப்படும். கடந்த ஒரு வருட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி யாழ்ப்பாணம் டிப்போ 3 ஆவது இடத்தை பிடித்துள்ளது. அதனாலேயே அதனை மிகச் சிறந்த முறையில் தரமுயர்த்த தீர்மானித்துள்ளோம்.

அத்துடன், மோதல்களால் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக கிளிநொச்சி, மற்றும் முல்லைத்தீவு டிப்போக்கள் இயங்கவில்லை. எதிர்வரும் காலங்களில் அவற்றை இயங்கவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (சி)

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய மரநடுகைத் திட்டத்தின்கீழ் நடுகை செய்வதற்கான மரக்கன்றுகளை சங்கத் தலைவர் த.சந்திரதாஸ், பொது முகாமையாளர் எஸ்.வைத்தீஸ்வரன், இயக்குநர் சபை உறுப்பினர் எஸ்.குலராஜசிங்கம் மற்றும் பணியாளர்கள் எடுத்து வருவதை முதலாவது படத்திலும் சங்கத்தின் மற்றொரு இயக்குநர்சபை உறுப்பினரான பி.சந்தியாப்பிள்ளை மரக்கன்று ஒன்றை நடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: கர்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
சாமியே சரணம் ஐயப்பா

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விரோதிவருடம் ஆனி 28ஆம் நாள் (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 8.50 மணி முதல் 10.25 மணிவரையுள்ள சதயு நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுப வேளையில்

திரு. திருமதி
சிவசம்பு தம்பதியரின்
புதல்வன்
திருநிறைச் செல்வன்
கேசவன்
(நுவாரகா ஜுவல் ஹவுஸ்)
அவர்களுக்கும்

திரு. திருமதி
சுந்தரலிங்கம்
தம்பதியரின்
புதல்வி
திருநிறைச் செல்வி
சுபஜா
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு திருமதி
ஜெகதீஸ்வரன் தம்பதியர் [கண்ணன்],
(புதிய நதியா நகை மாடம்),
321/T, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

த.மு.: திரு திருமதி லயன்ஸ்
சுந்தரலிங்கம் குடும்பம் (J.P.),
42/3, கல்லூரி ஒழுங்கை, நீராவியடி,
யாழ்ப்பாணம்.
நி.மு.: சத்திரந்தை (களபூமி), காரைநகர்.

(86904) இருவீட்டார் அழைப்பு.

சார்க் நாடுகளின் சிறுவர்கள் மாநாட்டில் கொழும்பு பிரகடனத்தை முன்வைக்க முடிவு

சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 11

சார்க் நாடுகளின் சிறுவர்கள் தொடர்பான அமைச்சர்களின் மாநாட்டின்போது கொழும்புப் பிரகடனம் முன்வைக்கப்படவுள்ளது என சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் சட்டத்தரணி எம்.சுமணதாச தெரிவித்தார்.

சார்க் அமைப்பு நாடுகளின் சிறுவர்கள் தொடர்பான சிரேஷ்ட அதிகாரிகளின் மாநாடு நேற்று முன்தினம் காலை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் உத்தியோக பூர்வமாக ஆரம்பமானது.

அமர்வுக்குத் தலைமை வகித்த சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அமர்வின் ஆரம்பத்தின்போது சார்க் வலய நாடுகளில் சிறுவர்களின் நலன் காக்கவும் மேம்பாட்டுக்காகவும் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆக்கபூர்வமான திட்டங்கள் தொடர்பான அறிக்கை ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் தெற்காசிய நாடுகளுக்கான பிராந்திய ஆலோசகர் கெப்ரியல் கோஹ்லரால் வாசிக்கப்பட்டது.

அமைச்சின் செயலாளர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

சார்க் வலய நாடுகளில் சிறுவர்களின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்துக் கண்காணிக்கவும் அது தொடர்பான அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பொறுப்பையும் சார்க் நாடுகள் 'யுனிசெவ்' நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையே இன்று சமர்ப்பிக்கப்பட்டது. வலய நாடுகள் சிறுவர்களுக்கான பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருவது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டுவரையிலான ஒரு தசாப்த கால எல்லையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களே 'யுனிசெவ்' நிறுவனத்தின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு வருகின்றதென அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம் ஆகிய நாடுகளின் அமைச்சுகளின் செயலாளர்கள், பணிப்பாளர்கள் உட்பட சிரேஷ்ட அதிகாரிகள் பிரதிநிதிகளாக இன்றைய அமர்வில் கலந்து கொண்டனர். (சி)

நயினாதீவு இறங்குதுறை வேலைகள் இம்மாதத்துடன் பூர்த்தியாகும்

யாழ்ப்பாணம், ஜூலை11

நயினாதீவு- இறங்குதுறைமுக வேலைகள் இந்தமாத இறுதிக்குள் முழுமையாக நிறைவுபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான வேலைகள் தற்போது இடம்பெற்றுவருகிறதாக வீதி அபிவிருதி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நூறு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த இத்துறைமுகம் கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியஒன்றாகும்.

கடந்த ஆண்டில் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதால் பல மில்லியன்ரூபாசெலவில் இத்திட்டம் நிறைவேறுகிறதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(203-302)

மாவட்ட மட்ட பாடசாலைகளிடையே இடம்பெற்ற ஆங்கிலதினப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்.மாவட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விவரங்கள் வெளியாகியுள் என.

இதன் ஒரு பகுதி கடந்த 4ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது.

ஒப்புவித்தல்

தரம்-3

ஏ.எம்.கிரகரி(சென்.ஜோன்ஸ் கல்லூரி), எம்.கீதாஞ்சலி (சாவகச்சேரி இ.ஆ. பா.), எஸ். கம்சாயினி (வட.இந்து மகளிர் கல்லூரி), கே.சிந்துஜா (உடுவில் மகளிர் கல்லூரி).

தரம்-4

யூ.விதுசன் (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி.), எஸ்.சௌமிகா (யாழ்ப்பாணக் கல்லூரி), எம்.மதுமிதா (நெல்லியடி எம். எம்.ரி. எம்.எஸ்.).

தரம்-5

ஜே.சிநோவா (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி.), மைக்கீயல் பியோனா பெனடிற் (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி.), வை. நிவேதன் (யாழ்ப்பாணக் கல்லூரி).

தரம்-6

ஈ.ரி.சுஜீவன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), வி.மாதுமை (வட.இந்து மகளிர் கல்லூரி), ஆர்.இலக்கியா (யாழ்ப்பாணக் கல்லூரி).

தரம்-7

ரி.சரோன் திவ்யா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ரி.லக்ஸ்மி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), என்.தாரங்கி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

தரம்-8

கே.ரவிகரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.ஆஷா டிவினியா (யாழ்ப்பாணக் கல்லூரி), எச்.கன்னா நரசா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.தேனுஷா (இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்).

தரம்-9

பி.பிறஸ்சி கன்னா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சி.வி.வினுஷாந் (யாழ்.இந்துக் கல்லூரி), எ.ரி.எமிலின் சிந்துஜா (வட.மத்தி மகளிர் கல்லூரி).

தரம்-10

ஜே.ஜே.ஜீவநேசன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.பிரதட்சனா (உடுவில் மகளிர் கல்லூரி), என்.கிருஷிகா (இளவாலை கன்னியர்மடம் ம.வி.).

தரம்-11

பி.ஏ.ஆர்.திவாகர் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எச்.எஸ்.ராஜாராம் (சென். ஜோன்ஸ் கல்லூரி), ரி.டிலக்ஷி (உடுவில் மகளிர் கல்லூரி).

ஆயத்தப்படுத்தப்பட்ட பேச்சு

தரம்-12

எம்.துளசி (யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ்.கௌசிகா (விக்ரோரியாக் கல்லூரி), பி. நந்திகரன் (யாழ்.இந்துக் கல்லூரி).

தரம்-13

எஸ்.மாதங்கி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ரி.விதுர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.மதுரா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை).

ஆயத்தப்படுத்தப்படாத பேச்சு

தரம்-12

பி.நந்திகரன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ஏ.வி.பொனிஸ்லோஸ் துஷன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), கே.பிரதீப் (நெல்லியடி ம.ம.வி.).

தரம்-13

ஆர்.விதுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), எம்.அழகராஜன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), எஸ்.பபிதா (நெல்லியடி ம. ம.வி.).

(முற்றும்).

நினைவு கூருவோம்
(11★07★2009)

அமரர்
ஆறுமுகம் மகேஸ்வரன்

தோற்றம்: 19★07★1939
மறைவு: 11★06★2009

20 ஆண்டுகள் எம்முடன் வாழ்ந்தும் 50 ஆண்டுகள் தொழில் நிமித்தம் நைஜீரியா, கொழும்பு போன்ற இடங்களில் வாழ்ந்து இறுதியாக கண்டியில் மறைந்தீர்கள். இன்று எம்முடன் இல்லாவிட்டாலும் நாம் வாழும் காலம் வரை உங்களை மறவாது நினைவு கூருவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

போதனை, தெல்லிப்பழை. மனைவி, பிள்ளைகள், சகோதர், பிள்ளைகள்.

(86913)

தேவை

யாழ்.நகரில் அமையவுள்ள தனியார் நிறுவனமொன்றிற்கு அலுவலக ஊழியர் தேவை. Mangiferra.2006@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விவரத்தையும் தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் அனுப்பி வைக்கவும். யாரும் விண்ணப்பிக்கலாம். தொலைபேசி எண் முக்கியம்.

பொதுக் கூட்ட அறிவித்தல்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 12.07.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குச் சங்க அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல அங்கத்தவர்களையும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

இணைச் செயலாளர்.
இந்து இளைஞர் சங்கம்,
தெல்லிப்பழை.
(சி/559449)

நெஞ்சை விட்டகலா நீர் நிறைந்த விழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்

அன்னை
அரவணைப்பில்
14
.
05
.
1936



ஆண்டவன்
அரவணைப்பில்
22
.
06
.
2008

அமரர் முருகேசு கிருஷ்ணன்

அன்னைக் காட்டி அறிவை ஊட்டி
அன்போடும் பண்போடும் வளர்த்து
வழிகாட்டிய அன்புத் தெய்வமே.....!
ஆண்டு ஒன்று மறந்தோடி
மறைந்திடினும் நின் பகலை
நினைவுகளில் பகலிரவாய் நனைகின்றோம்
அகத்தில் மணம் கமழ வந்த
சந்தன மரமான உங்களை
பாரதில் சீவன் பாதாலர் சூடுவரோ?
எம் அன்பான தெய்வமே! அப்பா.....!
எம் இதயம் உள்ளவரை உங்கள் நினைவு
எம் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்திருக்கும்.

கல்லூரி வீதி,
இளவாலை.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

(86901)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
24
.
12
.
1924



விண்ணில்
04
.
07
.
2007

அமரர் செல்லப்பா இராசரத்தினம்
(மாவெள்ளை)
(ஓய்வுபெற்ற சாரதி- இ.போ.ச.)
திதி: சங்கடஹர சதுர்த்தி

பாசமும் பரிவும் காட்டிய பண்பின் சிகரமே!
நேசத்துடன் வாழ்ந்து மறைந்து விட்டீர்கள்!
உங்கள் பிரிவைத் தாங்காமல் நாம்
துவண்டு கதிகலங்கிப் போனோமே!
இன்பமும் துன்பமும் சகஜம் ஆனால்
உங்கள் பிரிவைத் தாங்க முடியவில்லையே!
உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்வோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவில்..
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(86902)

MULTIMEDIA COURSES

100% செய்முறை பயிற்சி
எண்ணங்களின் பிரதிபலிப்பு

Diploma in Digital Video Production
(Audio & Video Editing)

Advanced Diploma in Digital Pre-Press

தற்பொழுது பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

ASIAN - CSC COMPUTER EDUCATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வருடம் போக்குவரத்து அமைச்சுக்கு 230 கோடி ரூபா குறைநிரப்புப் பிரேரணை

அமைச்சுக்கு மாதாந்தம் 16½ லட்சம் ரூபா நட்டம்

கொழும்பு,ஜூலை11

போக்குவரத்து அமைச்சுக்கு 2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமாக 229 கோடி 98 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொடுப்பதற்கான குறைநிரப்பு பிரேரணை ஒன்று நேற்று முன்தினம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவை வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவையை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல கருத்திட்டங்களுக்கு இந்நிதி பயன்படுத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகப்பெரும நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

இக்குறைநிரப்பு பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து அதுமீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய அமைச்சர் டளஸ் அழகப்பெரும இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

2009 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் போக்குவரத்து அமைச்சுக்கு 60 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டது. போக்குவரத்து சபை ஊழியர்கள் சுய விருப்பத்தின் பேரில் பணியில் இருந்து ஓய்வு பெறும் திட்டம் ஒன்றை நாம் அப்போது நடைமுறைப்படுத்தினோம். அத்திட்டத்திற்கு அமைவாக ஊழியர்கள் எண்ணிக்கை குறைவடையும்போது போக்குவரத்துச் சபைக்கு அதிக நிதி தேவைப்பட்டது என்று நினைத்தே நாம் இந்த நிதியை ஒதுக்கினோம். ஆனால், நினைத்தபடி அத்திட்டம் வெற்றியளிக்கவில்லை.

போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகளுக்கு ஒவ்வொரு மாதமும் 21 கோடி 60 லட்சம் ரூபாவை ஒதுக்கவேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது. இதனால் வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 60 கோடி ரூபா மூன்று மாதங்களுக்குத்தான் போதுமாகவிருந்தது.

2005ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 450 கோடி ரூபாவும், 2007 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் 294 கோடி 50 லட்சம் ரூபாவும், 2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 260 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டன.

மாதாந்தம் 16½கோடி ரூபா நட்டம்

2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில்தான் மிகக்குறைந்த தொகையான 60 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது.

இந்த சொற்ப நிதியைக்கொண்டு பல போக்குவரத்துச் சேவைகளைச் செய்து நாம் நட்டத்தை எதிர்கொள்கிறோம். பாடசாலை மாணவர்களுக்கான பருவச்சீட்டுக்கு 10 வீதக் கட்டணத்தை மாத்திரமே நாம் அறவிடுகிறோம். திறைசேரி இதற்கு 5 வீதத்தை நிவாரணமாக ஒதுக்குகின்றது. இதில் நட்டத்தை எதிர்கொண்டுள்ளோம்.

இருந்தாலும் இந்தச் சேவையை எமது கடமை என நினைத்து அந்த நட்டத்தை நாம் தாங்கிக்கொள்கிறோம்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான போது 182 பஸ்கள்தான் பாடசாலை சேவையில் ஈடுபட்டிருந்தன. அவற்றை நாம் 552 ஆக உயர்த்தியுள்ளோம். ஆயிரமாக உயர்த்துவதே எமது இலக்கு.

மொத்தத்தில் மாதம் ஒன்றுக்கு நாம் 16 கோடி 50 லட்சம் ரூபா நட்டத்தை எதிர்நோக்குகின்றோம். அத்தோடு போக்குவரத்துச் சபை ஊழியர்களின் நிலுவையாகவுள்ள வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவையும் வழங்கவேண்டியுள்ளது - என்றார். (சி)

சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை11

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தின் ஏற்பட்டில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நல்லூர், ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்குச் சிதம்பரநாதன் சசீவன் ''திருவாசகம் என்னும் தேன்'' என்னும் பொருளிலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 5.30 மணிக்குச் சிவலிங்க யோககேந்திரா நிலையச் செயலாளர் சிவஉமாசுதன் ''பெரியபுராணத்தின் பெருமைகள்'' என்னும் பொருளிலும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (204)

விதை வெங்காயத்தைச் சேமித்து வைப்பதற்கு களஞ்சியங்கள் அமைத்துக் கொடுக்க ஏற்பாடு

புங்குடுதீவு கமநல போதனாசிரியர் தெரிவிப்பு

நல்லூர்,ஜூலை11

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாமே பயிரிடுவோம். நாட்டைக் கட்டியெழுப்புவோம் திட்டத்தில் இரண்டு விவசாயிகளுக்கு விதை வெங்காயத்தைச் சேமித்து வைத்து காலபோகத்தில் நடுகை செய்யக்கூடியதாக கிராமிய மட்ட விதை வெங்காயம் சேமிப்புக் களஞ்சிய வசதியை ஏற்படுத்திக்கொடுக்க விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாயிகளின் 50 வீத மானியத்துடன் இந்தக் களஞ்சியம் அமைக்கப்படும்.

இதற்கெனத் திட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் புங்குடுதீவு கமநலசேவை போதனாசிரியர் பொ.பத்மநாதன் தெரிவித்தார். (203-111)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் விசேட தேவைக்குரிய 756 பேர் இனங்காணப்பட்டனர்

பிரதேச செயலக சமூக சேவை அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை11

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் விசேட தேவைக்குரியவர்கள் 756 பேர் இனம் காணப்பட்டு உள்ளனர்.

நவாலியில் மட்டும் 58பேர் இனங் காணப்பட்டுள்ளனர். இது வேதனை தரும் விடயமாகும்.

இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேச செயலக சிரேஷ்ட சமூகசேவை அதிகாரி வி.அருந்தவராசா தெரிவித்தார்.

நவாலி - ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிறுவன அனுசரணையில் விசேட தேவைக்குரியவர்களிற்கான உதவியும் - கருத்தரங்கும் நவாலி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக மறைந்த சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் செ.சதீஷ் ஞாபகார்த்தமாக விசேட தேவைக்குரியவர்களிற்கான உதவி வழங்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சமூகசேவை அதிகாரி வி.அருந்தவராசா உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

விசேட தேவைக்குரியவர்களிற்கு சமூகத்தில் உள்ள நலன்விரும்பிகள், பொது அமைப்புகள் உதவுவதற்கு முன்வரவேண்டும்.

இன்றைய காலத்தில் இவ்வாறான தேவை உடையவர்களுக்கு உதவும் அமைப்புகள் குறைவாகவே உள்ளன.

அதேநேரம் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சிறுவர் நல நிதியம் விசேட தேவை உடையவர்களிற்கு உதவ முன்வந்தது வரவேற்கத்தக்க விடயம்.

வலி.தென்மேற்கில் உள்ள ஊனமுற்ற பிரிவினருக்கு உதவ கரித்தாஸ் - கியூடெக் தொண்டு நிறுவனம் 44லட்சம் ரூபாவை ஒதுக்கித்தந்துள்ளது.

இதன்மூலம் இத்தேவை உடையவர்கள் ஓரளவிற்கு நன்மையடையக் கூடியதாகத் திட்டங்கள் முன்வைக்கப்படும் - என்றார்.

பசுமைப்புரட்சியாளர் வை.செகராஜசிங்கம், நவாலி மகாவித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார், நவாலி வடக்கு கிராம அலுவலர் அ. தனபாலரத்தினம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

விசேட தேவை உடையவர்களிற்கான உதவியைச் சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக அதிகாரி எம்.முரளி வழங்கினார். (203-302)

வசதியற்ற குடும்பங்களை மேம்படுத்த அமைச்சர் டக்ளஸ் உதவிகள் வழங்கினார்

யாழ்ப்பாணம்,ஜூலை11

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சரின் ஏற்பாட்டில் வசதியற்ற குடும்பங்களை மேம்படுத்தும் உதவித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய், சங்கானை, காரைதீவுப் பிரதேச மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

துவிச்சக்கர வண்டிகள், மூக்குக்கண்ணாடிகள், விவசாய உபகரணங்கள், மரக்கன்றுகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், நுளம்புவலைகள், கோழிக்குஞ்சுகள், பசுக்கள் உட்பட பல்வேறு பயன்தரும் பொருள்களும் உபகரணங்களும் உள்ளீடுகளாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேச செயலகங்களிலும் காரைநகர் கமநல சேவைகள் திணைக்கள கட்டடத்திலும் இடம்பெற்ற மேற்படி வைபவங்களில் அவ்வப் பிரதேச செயலாளர்கள், கிராமசேவையாளர்கள், சமூகசேவைகள் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மேற்படி பகுதிகளில் அமைச்சரின் வருகையறிந்து திரண்டிருந்த மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் யாழ். மாநகர சபைத் தேர்தலின் பின்னர் இப்பகுதிகளுக்கு விஜயம் செய்து பொதுமக்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் தனித்தனியாகக் கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (203)

யாழ்.கல்வி வலய மாணவர்களின் கணித வினாடிவினாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்.கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கணித வினாடி வினாப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:-

ஆங்கிலமொழி மூலம்

தரம் 6: எஸ்.சுபநிலா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கே.மாதினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எம்.பிரியந்தி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

தரம் 7: ஆர்.கீர்த்திகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பி.மேஷிகன் (யாழ். இந்துக்கல்லூரி), பி.ஹரணி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

தரம் 8: எஸ்.பாவனா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ்.சுவக்னன் (யாழ். இந்துக்கல்லூரி), யு.தேனுகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

தரம் 9: ஜி.தரண்யா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பி.குணவரன் (யாழ். இந்துக்கல்லூரி), எஸ்.காஞ்சனா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

தரம் 10: ஐ.லக்சியா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கே.குருபரன் (யாழ். இந்துக் கல்லூரி), ஆர்.பிரணவன் (யாழ். இந்துக் கல்லூரி).

தரம் 11: எஸ்.அமுதீசன் (யாழ்.இந்துக் கல்லூரி), பி.ஜனார்த்தனசர்மா (யாழ். இந்துக் கல்லூரி), ஜே.அன்ரன் நிசாந்தன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி).

தமிழ்மொழி மூலம்

தரம் 6: எஸ்.சிவானுஜா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), என்.சரண்யா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ரி.றெனோஜன் (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.).

தரம் 7: ஜே.அபிராமி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), வை.சங்கவி (கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.), எம்.நிலுஜா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

தரம் 8: எஸ்.தனுசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எம்.பவித்ரா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),கே.விந்துஜன் (அரியாலை ஸ்ரீபார்வதி வித்தி.).

தரம் 9: பி.கௌசல்யா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ரி.பிரணவி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கே.தர்மிகா (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.).

தரம் 10: என்.லவலோஜன் (யாழ். இந்துக் கல்லூரி), சி.ராம்ராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி), என்.பிருந்தா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

தரம் 11: வை.யனுர்ஷ் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எம்.மிதுரிகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பி.சங்கீதா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை). (203)

நல்லூர் லயன்ஸ் கழக பதவியேற்பு வைபவம் அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் அரசாங்க அதிபர் இராகவன் உரையாற்றுவதையும் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பதவியேற்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

பார்வை குறைந்த மாணவர்களுக்குக் கண்ணாடி வழங்கப்படுவதை மூன்றாவது படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

Diploma in Graphic Designing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photo shop+Corel Draw
Macro Media Flash+Cool 3D Studio

Diploma in Hardware Engineering
Assembling+Upgrading+Troubleshooting+Repairing
Servicing+Software Installation+Config Networking Ect..

Diploma in Video Editing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter
Capturing+Pinnacle Studio+Adobe premeir
ஆங்கிலமூலமாக கற்பிக்கப்படும்

வகுப்புக்கள் ஆரம்பம்:- 13/07/2009 09 AM

மரண அறிவித்தல்கள்

'பண்ணிசைச் செல்வர்' வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

(முன்னாள் கணக்காளர், S.T.A. தபாக் நகைமாளிகை)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொட்டடி யாழ்ப்பாணத்தையும் கெனடி வீதி, திருநெல்வேலியையும் வதிவிடமாகக் கொண்ட தி.வே. பாலசுப்பிரமணியம் நேற்று (10.07.2009) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நயினை வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் ஏகபுதல்வனும் வேலணை வடக்கு, சோளாவத்தை நாகநாதர் - பாக்கியலட்சுமி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலணை வடக்கு, சோளாவத்தை குழந்தைவேலு (கந்தையா ஸ்ரோர், அம்பலாங்கொடை, KKS Transport) மற்றும் நடராஜா (ஓய்வுபெற்ற அரச ஊழியர் France) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான நயினை மு.இராமலிங்கம், இரத்தப்பிள்ளை - நாகம்மா மற்றும் பாலசுப்பிரமணியம் விசாலாட்சி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் பத்மநாதன் (கணக்காளர், அம்பிகை களஞ்சியம்), பாலராஜேஸ்வரன் (பொறியியலாளர்), நாகராஜேஸ்வரி (இசை ஆசிரியை, யா/துரையப்பா வித்தியாலயம்), சுந்தரேஸ்வரி, அமரர் புவனேஸ்வரி மற்றும் தியாகேஸ்வரி (உதவி ஆசிரியை, அன்பொளி கல்வி நிலையம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சகஸ்தினாவதி (சித்திரா), சாந்தினி (முன்னாள் ஆசிரியை, கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம்), சுகிர்தலிங்கம் (யாழ்.பிரதம தபால் அலுவலகம்) ஆகியோரின் அன்பு மாமனும் சுஹாசினி, பிரணவன், செந்தூரன், பிரஹாசினி, கோபிகன், சிந்துஜன், அபிராமி, விதுசாஜினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முடமாவடி, கெனடி லேன்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (86920)

தகவல்:
பா.பத்மநாதன் (மகன்),
கு.சரவணைநாதன் (மருமகன்).

குட்டி கந்தையா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டி கந்தையா நேற்று (10.07.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டி - அன்னத்தி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குட்டியர் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் காந்தமலர், பேரின்பநாதன், நாகராசா (பிரான்ஸ்), நாகேஸ்வரி, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் ரஞ்சிதமலர், இராஜேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அரியரெத்தினம் மற்றும் கனகேஸ்வரி, மோகனவதி, தயாபரன், இராசலிங்கம், இராசேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனும் சாரதாதேவி, பாலமுரளி, சறோஜினிதேவி, சித்திராதேவி, அரியமலர், காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் தேன்மொழி, துர்க்காயினி, தர்சினி, நிந்துஜா, மிதுலா, சிந்துஜா, தர்சன், மஜிந்தன், சரண்ஜா, சபிதா, சுஜிதா, அஜிதா, நாகதீபன், லச்சாயினி, ருத்திக்கா, றக்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் துறையூர், வேலணை தாளையம்பதி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
துறையூர்,
வேலணை. (86925)

தகவல்:
க.பேரின்பநாதன் (மகன்),
(நாதன் ஸ்ரோர்ஸ்).
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

குடாநாட்டிலுள்ள 31 பாடசாலைகளுக்கு கணனிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 11

குடாநாட்டில் உள்ள 31 பாடசாலைகளுக்கும் மேலதிக மாகாண கல்வி அலுவலகத்தால் கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

கப்பல் மூலம் அண்மையில் எடுத்து வரப்பட்ட 153 கணனிகளும் பின்வரும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வசாவிளான் மகா வித்தியாலயத்திற்கு 6, வட்டு. மத்திய கல்லூரி 6, மாதகல் சென். ஜோசப் மகளிர் 5, இளவாலை சென். ஹென்றி கல்லூரிக்கு 5, ஏழாலை ம. விக்கு 4, இளவாலை மெய்கண்டான் ம.விக்கு 4, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு 4 கணனிகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.

பண்ணாகம் மெய்கண்டான் ம.விக்கு 5, மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு 6, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு 4, இடைக்காடு மகா வித்தியாலயத்துக்கு 5, உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு 5,

கோண்டாவில் இந்து ம.விக்கு 6, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடத்துக்கு 6, அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரிக்கு 5 கணனிகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.

முத்துத்தம்பி மகா. வித்தி 5, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதயா ம.விக்கு 4, பெரியபுலம் ம.விக்கு 5, 'கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு 5, அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 4, வல்வை மகளிர் ம. விக்கு 5, வல்வை சிதம்பராக் கல்லூரிக்கு 5, அனலைதீவு சிவப்பிரகாச வித்தியாலயத்துக்கு 4 கணனிகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.

நயினாதீவு ம.விக்கு 4, அனலைதீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரிக்கு 4, கோண்டாவில் இராம கிருஷ்ண ம. விக்கு 5, அத்தியார் இந்துக் கல்லூரிக்கு 6, கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு 6, குருநகர் சென்.ஜோம்ஸ் ம.விக்கு 4, காரைநகர் யாழ்ரன் கல்லூரிக்கு 5 கணனிகள் வீதமும் வழங்கப்பட்டுள்ளன.

(203-224)

இடதுசாரி இயக்க முன்னோடி கரோலின் அந்தோனிப்பிள்ளை 102 ஆவது வயதில் மறைந்தார்

கொழும்பு, ஜூலை 11

இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும் தொழிற்சங்கவாதியும் முன்னாள் அமைச்சர் பிலிப் குணவர்த்தனவின் சகோதரியுமான கரோலின் அந்தோனிப்பிள்ளை தனது 102 ஆவது வயதில் அண்மையில் காலமானார். இந்தியாவில் புகழ்பெற்ற தொழிற்சங்கவாதியாக விளங்கிய லோகசபா உறுப்பினர் ரோனி அந்தோனிப்பிள்ளையின் மனைவியாவார்.

டொன்ஜே ரூபசிங்க குணவர்த்தன (பொறலுகொட ராலாஹாமி) யின் புதல்வியான இவர் இந்தியாவில் வெகு காலம் இருந்தவர். அவிசாவளையில் கடந்த 8 ஆம் திகதி அவரது இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன. (ப)

பார்வையற்றோருக்கு விசேட கணனிப் பயிற்சிநெறி

பார்வையற்றோருக்காக விசேட கணனிப் பயிற்சிநெறி பி.எச்.டி. ஜி.திட்டத்தின் மூலம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதன்ஆரம்பநிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட சமூகசேவை அலுவலர் ஆ.ஞான வேல் தலைமையில் யாழ்.பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கமும் சிறப்பு விருந் தினராக யாழ். பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ரி.முகுந்தனும் கலந்துகொள்வர்.

(203-288)

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்
சகலவிதமான மோட்டர் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும் சிறந்த முறையில் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.
இல.06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி
K.K.S.றோட. T.P.: 021 222 8680

வான் விற்பனைக்கு
TOWNACE (CR41) மாடல் வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773222897

தவறிவிட்டது
மீசாலை, இலந்தைக் கூடல் வீரகத்திப் பிள்ளையாரின் பாவனையிலுள்ள (பவுண்) சிறிய உருத்திராக்க மாலை நல்லூருக்கும், நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. யாராவது கண்டெடுத்தால் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே.இல.: 0772269936. (86897)

கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வலி. மேற்குப் பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முறையே முற்பகல் 9.30 மணிக்கும் 11 மணிக்கும் நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டங்களுக்கு துறை சார்ந்த பிரதிநிதிகளை தவறாது கலந்துகொள்ளுமாறு வலி.மேற்குப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (204)

நன்றி நவிலல்

மாண்புமிகு கௌரவ அமைச்சர்
டக்ளஸ் தேவானந்தா
அவர்கள் கொழும்புத்துறை
நெடுங்குளம் ஸ்ரீ அம்பலவாணர்
விநாயகர் ஆலயத்திற்கு
மின்னிணைப்புப் பெற்றுத்
தந்தமைக்காக நன்றி கூறுகின்றோம்.
அறங்காவலர்,
ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலயம்,
நெடுங்குளம்,
கொழும்புத்துறை.
(சி/ 3476)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியை வாழ்த்துகின்றோம்

இன்று (11.07.2009) இல் பரிசளிப்பு விழாக் கொண்டாடும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியை வாழ்த்துகின்றோம. மேலும் இக் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் கடமையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள், கல்விசார் ஊழியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் கல்லூரி மேன்மேலும் வளர்ச்சியடைய அன்புடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

Ranpa/ Samson
குழுமத்தின் வடமாகாண முகவர்,
68, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி/559475)

கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றும்
திருமதி மொறின் ஷாமினா பிரியவத்சலன்
அவர்களின் அன்புத் தந்தை
சின்னத்துரை டொமினிக் அரசேந்திரன்
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், நல்லூர்.
நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.

வேதாகமக் கருத்தரங்கு

(முழுநேர ஊழியர்களுக்கும், மனைவிமார்களுக்கும் மட்டும்)
விடயம்: "நம்பகமான ஆலோசகரும், ஆலோசனையும்"
"MENTORING"
இடம்: சீயோன் தேவாலயம்,
24, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(பழைய O.P.D. முன்பாக)
காலம்: 31.07.2009
நேரம்: காலை 9 மணிமுதல் 1 மணிவரை
செய்தியாளர்: போதகர் யோகனன் D.பிலிப்
கட்டணம்: தனிநபர் - 50/=, தம்பதியினர் - 75/=
(பாடக்குறிப்புகள், தேநீர் செலவுகள் உட்பட)
விண்ணப்ப முடிவுதிகதி : 22.07.2009
குறிப்பு: விண்ணப்பங்கள் யாவும் முழுப்பெயர், விலாசம், ஊழிய நிலை, சபையின் பெயர் போன்ற விவரங்களுடன் தலைமைப் போதகரின் சிபார்சுடன் அனுப்பப்படவேண்டும். இறுதிமுடிவு கடிதமூலம் தெரியபடுத்தப்படும்.
மேலதிக விவரங்களுக்கு:
போதகர், சீயோன் தேவாலயம்,
347, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 021 2222707
(சி/559471)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நாவில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்: அமெரிக்கா ஆதரவு தெரிவிக்கவில்லை!

அமைச்சர் கிருஷ்ணா தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை 11

ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவை நிரந்தர உறுப்பு நாடாகச் சேர்ப்பதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவிக்கவில்லை - என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

மாநிலங்களவையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை எழுத்து மூலமாக அளித்த பதிலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராகவோ அல்லது உறுப்பு நாடாகச் சேர்ப்பதற்கோ அமெரிக்கா ஆதரவு தெரிவிக்கவில்லை. நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை உயர்த்திய போதுகூட இந்தியாவைச் சேர்ப்பதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவிக்கவில்லை.

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸில் விரிவுபடுத்தப்படும்போது அதில் நிரந்தரஉறுப்புநாடாகச் சேர வேண்டும் என்றே இந்தியா கருதுகிறது.

தீவிரவாதத்தை ஊக்குவிப்பதற்கான அடிப்

படை வசதிகள் பாகிஸ்தானில் உள்ளது. இதிலிருந்து நமது நாட்டையும் எல்லையையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிடையிலான பிரச்சினையில் மற்றொரு நாடு தலையிடுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

பாகிஸ்தானில் உள்ள சீக்கிய மக்களிடம் ஜஸியா வரி வசூலிக்கப்படுவது குறித்து பாகிஸ்தான் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம்.

அருணாசலப் பிரதேசத்தில் ஒரு நீர்ப்பாசன திட்டப் பணிக்கு ஆசிய வளர்ச்சி வங்கி, கடனுதவி அளித்துள்ளது. இதற்கு சீனா கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியின் செயல் இயக்குநர் கூட்டத்தில் அனைத்து நாட்டுப் பிரதிநிதிகளும் இத்திட்டத்துக்கு ஒப்புதல் அளித்த நிலையில் சீனப் பிரதிநிதி மட்டும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியில் இத்தகைய எதிர்ப்பை சீனா தெரிவிக்கிறது என பிற உறுப்பு நாடுகள் தெரிவித்தன - என்றுள்ளது.

அகமதாபாத் மற்றும் புறநகர் பகுதியில் சில தினங்களுக்கு முன்பு கள்ளச்சாராயம் குடித்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருபவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் உறவினர்கள் கதறி அழுகின்றபோது...

குஜராத்தில் கள்ளச்சாராயம் குடித்த 96 பேர் பலி; கண்டனம் தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

ஆமதாபாத், ஜூலை 11

குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் கள்ளச்சாராயம் குடித்து இறந்தவர்களின் எண்ணிக்கை 96 ஆக உயர்ந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மாநில எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சட்டப் பேரவையில் வியாழக்கிழமை கடும் எதிர்ப்பைத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முதல்வர் நரேந்திர மோடி மீது காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கடுமையாகக் குற்றம்சாட்டினர்.

கள்ளச்சாரய சாவு நிகழ்ந்த பகுதிகளில் உள்ள பொதுமக்களும், வணிகர்களும் கள்ளச்சாராய வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கெதிரான கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன. பொலிஸார் மீது சிலர் கற்களை வீசினர்.

இந்நிலையில் உதால், அம்ரஜ்வாதி, ராய்ப்பூர், ரஹியால் மற்றும் சில பகுதிகளில் இருந்து கள்ளச்சாராயம் குடித்தமையால் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்

இவர்களில் 41 பேர் வியாழக்கிழமை இறந்தனர். புதன்கிழமை இரவு வரை 45 பேராக இருந்த சாவு எண்ணிக்கை 96 ஆக உயர்ந்துள்ளது.

கள்ளச் சாராயம் குடித்து பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையில் மாநிலம் முழுவதும் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், சாராயம் விற்ற 450 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

'மகாத்மா காந்தி' பிறந்த மண்ணான குஜராத் மாநிலத்தில் மட்டும்தான் 'மதுவிலக்கு' அமுலில் உள்ளது.

ஈழத் தமிழர்களின் இன்னல்களை படமாக்குகின்றார் சந்தோஷ் சிவன்

சென்னை, ஜூலை 11

இலங்கைத் தமிழர்கள் படும் இன்னல்களை ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான சந்தோஷ் சிவன் படமாகத் தயாரிக்கிறார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

மணிரத்னத்தின் 'ராவண்' படத்துக்கு ஒளிப்பதிவு செய்து வருகிறேன். இப்படம் முடிந்ததும் 'சிலோன்' என்ற படத்தை இயக்குகிறேன். நவம்பரில் படப்பிடிப்புத் தொடங்கும். இதில் பிரபாகரன் பற்றியோ இலங்கை அரசின் செயற்பாடுகள் குறித்தோ படமாக்கப் போவதில்லை.

இலங்கைத் தமிழர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்கின்றனர். அவர்கள் படும் இன்னல்களை மட்டுமே இதில் சொல்லப் போகிறேன். தமிழ் பேசும் புதுமுகங்கள் இதில் நடிப்பார்கள் - என்றார்.

20 தமிழக மீனவர் இன்று விடுதலை

இராமேஸ்வரம், ஜூலை 11

இலங்கைச் சிறையில் உள்ள 20 தமிழக மீனவர்கள் இன்று 11ஆம் திகதி விடுவிக்கப்படுகிறார்கள் - என்று இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து தமிழகத்திலிருந்து வெளியான செய்திகள் வருமாறு -

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 4ஆம் திகதி மீன்பிடிக்க 5 படகுகளில் சென்ற 20 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்து சிறையில் அடைத்தது. இதையடுத்து, இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 4 நாள்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழகச் சிறைகளில் உள்ள 53 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் 9 படகுகளுடன் கடலோரக் காவல் படை கப்பல் மூலம் நேற்றுமுன்தினம் சென்னையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதேநேரத்தில் இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் நாளை 11ஆம் திகதி விடுவிக்கப்படுவார்கள் என இலங்கைத் தூதரகத்திலிருந்து தகவல் வந்துள்ளது.

அதனால், இராமேஸ்வரம் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

'குரு சிஷ்யன்' படத்தில் கதாநாயகனுக்கு முத்துக்குமார் பெயரை சூட்டவேண்டும்

வணங்காமண் பெயரிலும் படம் தயாரிக்க சத்தியராஜ் கோரிக்கை

விழாவில் சுருதி, ரவிக்குமார், பாக்கியராஜ், சின்னி ஜெயந்த், ராம நாராயணன், தினா, சத்தியராஜ்...

சென்னை, ஜூலை 11

'குரு சிஷ்யன்' படத்தில் கதாநாயகன் சுந்தர் சியின் கதாபாத்திரத்துக்கு, இலங்கைத் தமிழர்களுக்காக உயிர்த் தியாகம் செய்த 'முத்துக்குமார்' பெயரை வைக்க வேண்டும் - என்று நடிகர் சத்தியராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

என் போன்றவர்கள் தமிழ் உணர்வோடு குரல் கொடுக்கத்தான் முடிந்தது. ஆனால் சீமான் களத்தில் இறங்கிப் போராடியவர். அவர் தனது அடுத்த படத்துக்கு, 'வணங்காமண்' என்று பெயர் வைக்க வேண்டும் - என்றும் கேட்டுக்கொண்டார்.

சத்தியராஜ் - சுந்தர் சி. இணைந்து நடிக்க, ஷக்தி சிதம்பரம் தயாரித்து இயக்கம் செய்யும் 'குரு சிஷ்யன்' படத்தின் தொடக்க விழா, சென்னை ஏ.வி.எம். படப்பிடிப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை நடந்தது.

இந்த படவிழாவில், 'குரு'வாக இருந்த இயக்குநர்களும், அவர்களிடம் 'சிஷ்யர்'களாக வேலை செய்த இயக்குநர்களும் கலந்துகொண்டார்கள்.

இந்த விழாவில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

எனக்கு குரு, தந்தை பெரியார்தான். நடிப்பில், கமலஹாசனைப் பார்த்து பிரமித்திருக்கிறேன். அதுபோல் வாழ்க்கையில் என்னை பிரமிக்க வைத்தவர் சீமான்தான். என் போன்றவர்கள் தமிழ் உணர்வோடு குரல் கொடுக்கத்தான் முடிந்தது.

ஆனால் சீமான் களத்தில் இறங்கி போராடியவர். அவர் தனது அடுத்த படத்துக்கு, 'வணங்காமண்' என்று பெயர் வைக்க வேண்டும்.

குரு சிஷ்யன் படத்தில் கதாநாயகன் சுந்தர் சியின் கதாபாத்திரத்துக்கு, இலங்கைத் தமிழர்களுக்காக உயிர்த் தியாகம் செய்த 'முத்துக்குமார்' பெயரை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

தமிழக பொறியியல் கல்லூரியில் இடம் கிடைக்காதமையால்

5ஆவது மாடியிலிருந்து குதித்து ஆந்திரா மாணவி தற்கொலை

ஐதராபாத், ஜூலை 11

தமிழகப் பொறியியல் கல்லூரியில் படிக்க இடம் கிடைக்காதமையால் மாணவி ஒருவர் 5ஆவது மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்துள்ளார்.

ஆந்திர மாநிலம் ஐதராபாத்தை அடுத்த கோதாபெட் என்ற இடத்தைச் சேர்ந்த தேஜாஸ்வி (வயது - 19) அங்குள்ள பொறியியல் கல்லூரியில் படித்து வந்தார். அவர், தமிழ்நாட்டில் தஞ்சையில் உள்ள சாஸ்தா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரில் இ.சி.இ. பாடப்பிரிவு படிக்க விண்ணப்பித்திருந்தார். ஆனால் கிடைக்கவில்லை.

இதனால் மனம் உடைந்த தேஜாஸ்வி, அவர் குடியிருந்த அடுக்கு மாடி குடியிருப்பின் மேல் பகுதிக்குச் சென்று, 5ஆவது மாடியில் இருந்து அவர் கீழே குதித்தார். இதனால் உடல் சிதறி இறந்தார்.

மாணவியின் படுக்கை அறையில் இருந்து ஒரு கடிதத்தை பொலிஸார் கைப்பற்றினர். அதில், எனக்கு தமிழ்நாட்டில் உள்ள கல்லூரியில் இ.சி.இ. பிரிவில் படிக்க இடம் கிடைக்காதமையால் வாழப் பிடிக்கவில்லை. எனவே, தற்கொலை செய்து கொள்கிறேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வருணின் பாதுகாப்பு விவகாரம்: சிதம்பரம் மீது சுஷ்மா அதிருப்தி

புதுடில்லி, ஜூலை 11

வருண் காந்தியின் பாதுகாப்பு தொடர்பாக உள்துறை அமைச்சர் சிதம்பரம் அளித்த விளக்கம் திருப்தியாக இல்லை - என்று பா.ஜ.க. மூத்த தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் கூறினார்.

வருண்காந்திக்கு போதிய பாதுகாப்பு அளிப்பது தொடர்பாக மக்களவையில் விவாதம் நடைபெற்றது. அப்போது வருணுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு குறித்து விளக்கமாக தெரிந்துகொள்ள வேண்டுமானால் என்னை நேரில் சந்தித்துத் தெரிந்துகொள்ளுங்கள் என்று உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் கூறினார்.

மேலும் இது தொடர்பாக சுஷ்மா ஸ்வராஜுக்கு தான் கடிதம் எழுதியிருக்கிறார் எனவும் அவர் கூறினார்.

இதற்கு சுஷ்மா கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். வருண் பாதுகாப்பு தொடர்பாக தனக்கு எழுதிய கடிதத்தை சிதம்பரம் பகிரங்கமாக வெளியிட்டுவிட்டார் என்று குற்றஞ்சாட்டினார்.

இந்த நிலையில் டில்லியில் உள்துறை அமைச்சர் சிதம்பரத்தை நேற்றுமுன்தினம்விவாதக் கிழமை சுஷ்மா சந்தித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிதம்பரம் அளித்த விளக்கத்தில் திருப்தி இல்லை என்று கூறினார். ஆனால் வருண் பாதுகாப்பு தொடர்பாக சிதம்பரம் தெரிவித்த விவரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

பா.ஜ.க. எம்.பி. வருண்காந்தியின் உயிருக்கு ஆபத்து உள்ளது என்று உளவுத்துறை எச்சரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசுக்கு எதிராக மனு; நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

டில்லி, ஜூலை 11

ஓரினச் சேர்க்கை சட்டவிரோதம் அல்ல என்று டில்லி உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பதில் மனுத் தாக்கல் செய்யுமாறு அரசுக்கு உச்ச நீதிமன்று உத்தரவிட்டது.

ஓரினச் சேர்க்கை சட்டவிரோதம் அல்ல என்று டில்லி உயர்நீதிமன்றம் கடந்த 2ஆம் திகதி தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து டில்லியைச் சேர்ந்த ஜோதிடர் ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

டில்லி உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக இடைக்கால உத்தரவு எதையும் நீதிபதிகள் பிறப்பிக்கவில்லை, சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்துகளை அறிந்த பின்னர் தேவைப்பட்டால் அதுகுறித்து பரிசீலனை செய்யப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்ய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான ஆயம் உத்தரவிட்டது.

மேலும் இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணையை 20ஆம் திகதிக்கு நீதிமன்றம் தள்ளி வைத்தது.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட தொண்டு நிறுவனமான நாஸ் பவுண்டேசன் மற்றும் உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கில் தங்கள் தரப்பு கருத்தை தெரிவித்தவர்களுக்கும் நோட்டீஸ் அனுப்ப உச்ச நீதிமன்ற ஆயம் உத்தரவிட்டது.

அமர்நாத் சென்ற ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கியதில் பெண் பலி

அமர்நாத் கோயிலுக்கு பக்தர்கள் 3 பேரை நேற்றுமுன்தினம் ஏற்றிக் கொண்டு சென்ற ஹெலிக்கொப்டர் பெண் ஒருவர் மீது விழுந்து நொறுங்கியதில் அப்பெண் உடல் நசுங்கிப் பலியானார். ஹெலிக்கொப்டரில் இருந்த 3 பக்தர்களும், விமானியும் பலத்த காயத்துடன் உயிர் தப்பினர்.

காஷ்மீர் ம[illegible] இருந்து அமர்[illegible] கோயிலுக்கு [illegible]லும் பக்தர்கள் 3 பேரை ஏற்றிக் கொண்டு நேற்றுமுன்தினம் ஹெலிக்கொப்டர் ஒன்று சென்றது. அமர்நாத் கோயில் அருகே உள்ள தளத்தில் இறங்க முயன்றபோது திடீரென்று அந்த ஹெலிக்கொப்டர்தரையில் மோதி நொறுங்கியது.

அப்போது அந்த பகுதியில் நின்று கொண்டிருந்த ஒரு பெண் மீது ஹெலிக்கொப்டர் விழுந்தது. இதில் அவர் உடல் நசுங்கி பலியானார். ஹெலிக்கொப்டரில் இருந்த 3 பக்தர்களும், விமானியும் பலத்த காயத்துடன் உயிர் தப்பினர்.

அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாம்களில் அகதிகளைத் தடுத்து வைக்கும் நடவடிக்கைக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 11

வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான அப்பாவி மக்களின் நடமாட்ட சுதந்திரத்தைப் பறித்து, அவர்களை நலன்புரி மையங்களில் தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்து, மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை நீதிமன்றம் பரிசீலனைக்கு ஏற்பதா என்பது தொடர்பான விடயத்தில் அரசுத் தரப்பின் எழுத்துமூல ஆட்சேபனைகளைத் தெரிவிக்கக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, பி.ஏ.இரத்தினாயக்கா, சந்திரா ஏக்கநாயக்கா ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவைப் பரிசீலனைக்கு ஏற்பதா என்பது பற்றிய விசாரணையை நேற்று நீதிமன்றம் ஆரம்பித்தது.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் மனுவை ஆதரித்து வாதாடினார். '' இப்படி அப்பாவி மக்களைத் தடுத்து வைத் திருப்பது அரசமைப்பில் உறுதி செய்யப்பட்ட அடிப்படை உரிமைகளை ஒரு தலைப்பட்சமாக மீறுவதாகும். இந்த மனுவுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பில் ஏதேனும் சர்ச்சைகள் இருப்பின், அது வேறு விடயம். ஆனால், இங்கு அடிப்படைப் பிரச்சினை ஒன்று - நீதிமன்றம் தலையிட்டு நிவாரணம் வழங்கி, சீர்செய்யவேண்டிய சிக்கல் ஒன்று - உள்ளது. எனவே, இந்த மனுவை நீதிமன்று விசாரணைக்கு ஏற்று, உரிய முடிவை அறிவிக்க வேண்டும்.'' - என்றார் அவர்.

அரசுத் தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சமிந்திர பெர்னாண்டோ, கடந்த 7 ஆம் திகதி வரை 8 ஆயிரத்து 600 முதியவர்கள் மேற்படி முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலை நீதிமன்றுக்குத் தெரிவித்தார். படிப்படியாக ஆட்களை விடுவிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பது தொடர்பில் அரசுத் தரப்புக்குள்ள ஆட்சேபனைகளை எதிர்வரும 27 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி பணித்து வழக்கை நீதிமன்றம் ஒத்திவைத்தது

செஞ். குழுவை வெறியேற்ற முயன்றால் சர்வதேசம் உடன் தலையிட வேண்டும்

லண்டனின் 'த ரைம்ஸ்' பத்திரிகை வற்புறுத்து

லண்டன், ஜூலை 11

இலங்கையிலிருந்து வெளியேறுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டால், சர்வதேச சமூகம் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட வேண்டும். இலங்கை தேசிய நல்லிணக்கத்தை ஆரம்பிக்கும்வரை பொதுநலவாயம், ஐ.நா. போன்றவை இலங்கையைப் புறக்கணிக்க வேண்டும்.

- இவ்வாறு லண்டனில் இருந்து வெளியாகும் 'த ரைம்ஸ்' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

இடம்பெயர்ந்தோர் வாழும் முகாம்களில் நடப்பவற்றுக்கான சாட்சிகள் எவரும் இருப்பதை இலங்கை அரசு விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள 'த ரைம்ஸ்' மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அரசு மேலும் மோசமான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவைத் தனது பணிகளைக் குறைத்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது முகாம்களைக் கண்காணிக்கும் பணிகளைக் கைவிடவேண்டும். உதவித் திட்டங்களைக் கைவிடவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு உதவிகளுக்கான தேவை குறைவாக உள்ளது என அரசு தெரிவித்துள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்க பொய்.

அரசின் உத்தரவு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவை மிகவும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளியுள்ளது. வரலாற்றுரீதியாகப் பார்க்கும்போது நாஜி வதை முகாம்கள் குறித்துக் கூட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு எதனையும் தெரிவித்ததில்லை. இந்த முகாமிற்குச் செல்வதற்குத் தனக்கு கிடைத்த வாய்ப்பை வீணாக்க அது விரும்பாததே இதற்குக் காரணம்.

இலங்கையின் இறுதிக்கட்ட மோதலின்போது மோதல் நடைபெற்ற பகுதிகளுக்குள் அனுமதிக்கப்பட்ட அமைப்பு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவே யாகும்.

அறிக்கைகள் சீர்குலைத்தன

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் சில அறிக்கைகள் இலங்கை அரசை சீற்றத்துக்குள்ளாக்கியுள்ளன.

இந்த நவீன கால வதை முகாம்களில் என்ன நடைபெறுகின்றன என்பதற்கு சாட்சிகள் எவரும் இருப்பதை இலங்கை அரசு விரும்பவில்லை.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வெளியேற்றப்பட்டால் உலக நாடுகள் இணைந்து உடன் தலையிட வேண்டும்.

• இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்காகக் காத்திருக்கின்றது.

தமிழ் மக்களின் முகாம்களுக்குச் செல்வதற்கு மனிதாபிமான அமைப்புகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் வரை இந்தக் கடனை வழங்கக் கூடாது. - என்றுள்ளது.(அ-சி)

தமிழரை வெட்டிக்கொலை செய்த 5 தமிழர்களுக்கு நீண்டகாலச் சிறை!

ஒஸ்லோ நீதிமன்றம் வழங்கியது

ஒஸ்லோ, ஜூலை 11

நோர்வே பிரஜையான ஈழத் தமிழ் இளைஞர் ஒருவரை 'சமுராய்' ரக வாள்களைக் கொண்டு வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் கொலை செய்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியை வதிவிடமாகக் கொண்டிருந்த ஐந்து இலங்கைத் தமிழர்களுக்கு நோர்வே நீதிமன்றம் ஒன்று 11 வருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையான சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருக்கின்றது.

2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நோர்வேயின் கல்பெக்கன் பகுதியில் ரமணன் விவேகானந்தன் என்ற 20 வயது இளைஞரை வாளால் வெட்டிக் கொலை செய்ததாகக் கூறப்படும் வழக்கு ஒஸ்லோ நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்தே குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மேற்படி சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியிலிருந்து இந்நபர்கள் ஒஸ்லோவின் கல்பெக்கன் பகுதிக்கு வந்தே ரமணன் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒஸ்லோவில் இரு தமிழ்க் குழுக்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலவி வந்த முறுகல் நிலையின் விளைவே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் குரூரப் படுகொலை நோர்வேயில் பெரும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

ஈராக்கில் குண்டுத் தாக்குதல்கள்: 70 பேர் உயிரிழப்பு; 126 பேர் காயம்

பக்தாத், ஜூலை 11

ஈராக்கில் வியாழக்கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 70 பேர் வரை கொல்லப்பட்டனர். 126 பேர் படுகாயமடைந்தனர். ஈராக்கிய நகரங்களிலிருந்து அமெரிக்கத் துருப்புகள் வெளியேறிய பின்னர் இடம்பெற்றுள்ள படுமோசமான வன்முறைகள் இவையாகும்.

ஈராக்கிய நகரங்களில் பாதுகாப்புக்குப் பொறுப்பாக அமெரிக்கத் துருப்புகள் செயற்பட்டு வந்தன. இப்பொறுப்பை ஈராக்கிய படைகளிடம் ஒப்படைத்துவிட்டு, கடந்த ஜூன் 30 ஆம் திகதி அமெரிக்கத் துருப்புகள் வெளியேறின. இவ்வெளியேற்றத் தினம் ஈராக்கில் ஒரு தேசிய விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

அத்துடன் இத்தேசிய தினத்தையொட்டி, பரவலாக தேசிய கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. ஈராக்கிய ஜனாதிபதி ஜலால் தலபானி தாம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், எத்தகைய சவால்களையும் முறியடித்து நாட்டின் ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் காட்டிக்காக்க எமது படைகளால் முடியும். அவை பயிற்சியும் பக்குவமும் பெற்றுள்ளன'' என பெருமிதம் தெரிவித்திருந்தார்.

''ஈராக்கின் வட நகரான தல் அபாரில் வியாழக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் பலரின் உடல்கள் சிதைந்துவிட்டன. உற்றார் உறவினர்களைப் பறிகொடுத்த பெண்கள் வீதியில் அமர்ந்தும், புரண்டு உருண்டும் அழுது புலம்பினார்கள். பலர் தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு கதறி அழுதார்கள்'' என நகர அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

தால் அபாரிலுள்ள பயங்கரவாத ஒழிப்புப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த விசாரணையாளரின் வீட்டை நோக்கி வியாழக்கிழமை, உள்ளூர் நேரப்படி அதிகாலை 6.30 மணிக்கு பொலிஸ் சீருடையில் ஒருவர் வந்துள்ளார். அவர் தன்னோடு வானொலியொன்றையும், கைத்துப்பாக்கியொன்றையும் கொண்டு வந்துள்ளார். இப்படி வந்தவர் வீட்டுக் கதவை தட்டியுள்ளார். கதவு திறக்கப்பட்டதும், தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்துள்ளார்.'' என வடமேற்கு மாகாண பிரதம பொலிஸ் அதிபர் மேஜர் ஜெனரல் காலித் அல்-ஹமாதானி தெரிவித்துள்ளார்.

''கதவு திறக்கப்பட்டதும், தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்துள்ளார். இதில் விசாரணை அதிகாரி, அவரது பாரியார், புதல்வர் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். இதைக் கேள்வியுற்று மக்கள் வந்து திரண்டுள்ளனர். அச்சமயம் பிறிதொரு தற்கொலைக் குண்டுதாரி தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்துள்ளார். இவ்விரு தாக்குதல்களிலும் 38 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 66 பேர் காயமடைந்துள்ளனர்'' என்றும் அவர் விவரித்துள்ளார்.

ஷியா மாவட்டத்திலுள்ள சத்ரி நகர திறந்த வெளி சந்தையில் வியாழக்கிழமை இடம்பெற்ற இரு குண்டுத் தாக்குதல்களில் 18 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் காயமடைந்தனர். இவற்றிற்கு முன்னர் மொசூல் நகருக்கண்மையிலுள்ள இரு ஷியா கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதல்களில் 16 சிவிலியன்கள் கொல்லப்பட்டார்கள். 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஈரானிய தலைநகர வீதிகளில் மீண்டும் ஆர்ப்பாட்டப் பேரணி

பொலிஸார் தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

தெஹ்ரான், ஜூலை 11

ஈரானிய ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு ஆட்சேபனை தெரிவித்து எதிரணியினர் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். தலைநகரான தெஹ்ரானின் வீதிகளில் தடைகளையும் மீறி எதிரணியினர் வியாழக்கிழமையும் ஏக காலத்தில் மாபெரும் ஆட்சேபப் பேரணிகளை நடத்தினர்.

இப்பேரணிகளில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். மறுதேர்தல் நடத்தப்படவேண்டும் , ''சர்வாதிகாரி ஒழிக'' என அநேகர் கோஷங்கள் எழுப்பினர். இச்சமயத்தில் பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகைப் பிரயோகம் செய்தும், தடியடி நடத்தியும் பேரணிகளைக் கலைத்தனர் என நேரில் கண்டவர்கள் கூறினர்.

கண்ணீர் புகைப் பிரயோகத்துக்கு மத்தியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதித் தடைகளைப் புரட்டிவிட்டார்கள். குப்பைத் தொட்டிகளை உருட்டிவிட்டார்கள். இரு வாரகால ஓய்வுக்குப் பின்னர், வியாழக்கிழமை எதிரணியினரால் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அத்துடன் பரவலாகவும், பாரிய அளவிலும் ஆர்ப்பாட்டங்கள் நீடிக்குமென்றும் அவர்கள் சூளுரைத்துள்ளனர்.

தெஹ்ரானின் மிகப் பெரிய வீதியான வலியாஸிர் வீதியிலும் இன்னும் பல இடங்களிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டார்கள். அவர்களுடன் பாதுகாப்புப் படையினரும் தடியடி நடத்தி, ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டி அடித்தார்கள். சில ஆர்ப்பாட்டக்காரர்களால் குப்பைத் தொட்டிகளில் தீ மூட்டப்பட்டது என்றும் நகர குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டார்கள்.

மியான்மரில் நிலச்சரிவு 24 பேர் உயிரிழப்பு

யங்கூன், ஜூலை 11

மியான்மரின் வடக்கு மாநிலமான கச்சினில் லோங்கின் என்னுமிடத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி 24 பேர் உயிரிழந்தனர். இப்பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் 13 பெண்கள் உட்பட 24 பேர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தோனேஷிய ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மீண்டும் வெற்றி

முடிவை ஏற்க போட்டி வேட்பாளர்கள் மறுப்பு

ஜகர்த்தா, ஜூலை 11

இந்தோனேஷிய ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ மீண்டும் வெற்றி பெற்றுள்ளார் என அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

எனினும், இதை பாம்பாங்கை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பாம்பாங் வெற்றி பெற்றார் என அறிவித்துள்ளமை ஜனநாயக விரோத செயல் என அவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இந்தோனேஷிய ஜனாதிபதித் தேர்தலில் பதிவான வாக்குகள் புதன்கிழமை விரைவு முறையில் எண்ணப்பட்டு, முடிவு உடனே அறிவிக்கப்பட்டது. அப்போது 1 கோடியே 8 இலட்சம் வாக்குகள் எண்ணப்பட்டதில் பாம்பாங் 62 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார் என தேர்தல் ஆணையம் அறிவித்தது.

அவரை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மேகவதி சுகர்னோபுத்ரி 28 சதவீத வாக்குகளையும், தற்போதைய துணை ஜனாதிபதி யூசுப் கல்லா 10 சதவீத வாக்குகளையும் பெட்டியுள்ளனர் என்றும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டது.

மேகவதியும், யூசுப் கல்லாவும் இம்முடிவுகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ''தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடாமல் பாம்பாங் வெற்றி பெற்றுள்ளார் என ஆணையம் அறிவித்துள்ளது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது'' என இவ்விருவரும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இதையடுத்து, நாட்டின் பிற தீவுப் பகுதியிலிருந்து வாக்குப் பெட்டிகள் இன்னும் கொண்டு வரப்படவில்லை. அவை தலைநகர் ஜகர்த்தாவுக்கு விரைவில் கொண்டுவரப்பட்டு எண்ணப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தென் மேற்கு சீனாவில் பூகம்பம்: 18 ஆயிரம் வீடுகள் நிர்மூலம்

பீஜிங், ஜூலை 11

தென் மேற்கு சீனாவை உலுக்கிய பூகம்பத்தால் பாரிய அனர்த்தங்கள் விளைந்துள்ளன. 18 ஆயிரம் வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன. ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். 300 இற்குப் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பூகம்ப அதிர்வை உணர்ந்து மக்கள் தக்க சமயத்தில் கட்டடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். அதனால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

யுனான் மாகாணத்திலுள்ள யொவான் என்னும் பகுதியில் இப்பூகம்பம் மையங் கொண்டிருந்தது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 6 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. இம் மாகாணததில் ஏறத்தாழ 40 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன என உத்தியோகபூர்வ சிங்குவா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

''பூகம்பத்தை அடுத்து, வியாழக்கிழமை மாலை ஏட்டுத் தடவைகள் நில அதிர்வுகள் ஏற்பட்டன. உள்ளூர் தொலைக்காட்சியில் பூகம்பத்தின் அனர்த்தங்கள் காட்டப்பட்டன. போர்வைகளில் பல சடலங்கள் சுற்றப்பட்டிருந்தன. எனவே, உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம்'' என அல்-ஜசீரா நிருபர் டொனி ஷெங், பீஜிங்கிலிருந்து தெரிவித்துள்ளார்.

''யுனான் மாகாணத்திலுள்ள யொவான் மிகவும் பின்தங்கிய மலைப்பிராந்தியமாகும். போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவு. அதனால் துரிதமாக அங்கு செல்லவோ, அங்கிருந்து திரும்பவோ முடியாது. அதனால், அனர்த்த விவரங்கள் முழுமையாக இதுவரை வெளியாகவில்லை'' என்றும அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பிராந்தியத்தில் பெருமளவில் திபேத்திய இன மக்களே வசிக்கிறார்கள். அவர்களின் வீடுகளே நிர்மூலமாக்கப்பட்டும், சேதப்படுத்தப்பட்டுமுள்ளன'' என்றும் அவர் கூறியுள்ளார். சீன அதிகாரிகள் குறிப்பிடுகையில், ''யொவான் பிராந்தியத்துக்கு, 4 ஆயிரத்து 500 தற்காலிகக் கூடாரங்களும், 3 ஆயிரம் மெல்லிய மெத்தைகளும் அனுப்பப்பட்டுள்ளன'' எனத் தெரிவித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் வந்துள்ள கடற்றொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரோ வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றுவதையும் கடற்றொழிலாளி ஒருவர் மகஜர் கையளிப்பதையும் பங்கு கொண்டவர்களையும் படங்களில் காணலாம்

(படங்கள்: லக்ஸ்மன்)

யாழ்.மாநகர சபைப் பிரதேசம் தூய நகரமாகும்; அதற்கான திட்டம் நேற்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ். மாநகர சபைப் பிரதேசத்தை தூய்மை மிகுந்த நகரமாக்கும் திட்டம் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத் திட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்தார். மாநகர சபை ஊழியர்கள் மற்றும் பொது மக்களின் உதவியுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்திட்டம் குறித்து அமைச்சர் விளக்கம் அளித்தார்.

அவர் தெரிவித்தவை வருமாறு:-

அடுத்த இரு வருடங்களுக்குள் யாழ். மாநகரை சுத்தமான - தூய்மையான- நகரமாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இத்திட்டம் நேற்று யாழ். புல்லுக்குளம் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மணிகூட்டுக் கோபுரத்தில் இருந்து முற்ற வெளிக்குச் செல்லும் வீதிப் பகுதியும் சுற்றாடலும் சிரமதானம் மூலம் நேற்று துப்புரவு செய்யப்பட்டது.

இந்தப் பணி மூலம் முற்றவெளிப் பகுதி முனியப்பர் கோயிற் பகுதி சுத்திகரிக்கப்பட இருக்கின்றது. சுத்திகரிக்கும் பணிகள் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

அடுத்த இரு வருடங்களில் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் வருமாறு:-

* சகல குளங்களும், வடிகால்களும் புனரமைக்கப்படும்.
* நிலத்தடி மலசலகூட வடிகால்கள் புனரமைக்கப்படும்.
* சகல வீதிகளும் அகலமாக்கப்பட்டு புனரமைக்கப்படும்.
* சுப்பிரமணியம் பூங்கா நவீனமயமாகக்கப்படுவதுடன் மேலும் இரு பூங்காக்கள் அமைக்கப்படும்.
* துரையப்பா ஸ்ரேடியம் சகல விளையாட்டுக்களையும் மேற்கொள்ள வசதியாக நவீனமயப்படுத்தப்படும்.
* யாழ். நகரத் திறந்த வெளி அரங்கு மீளக் கட்டி எழுப்பப்படும்.
* மரக்கறிச் சந்தைப் பகுதியில் மாடிக் கட்டடம் அமைக்கப்படும். கீழ்த் தளத்தில் வாகனத் தரிப்பிடம் அமைக்கப்படும்.
* யாழ்.பஸ்நிலயம், மினிபஸ் தரிப்பிடம் புனரமைக்கப்படும்.
* தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு நகர் அழகுபடுத்தப்படும்.
* நுளம்பு, இலையான் ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
* புராதன கோட்டைப் பகுதியின் வெளிப் புறமும் உள்புறமும் புனரமைக்கப்படும்.
* முற்றவெளியில் நிழல் மரங்கள் நாட்டி பொழுது போக்கு மையமாக்கப்படும். (அ-1)

ஹோமியோபதி பட்டப்படிப்பு: இந்திய அரசு புலமைப் பரிசில்

கொழும்பு, ஜூலை11

இலங்கை மாணவர்கள் பத்துப் பேருக்கு ஹோமியோபதி மருத்துவப் பட்டப்படிப்பு மேற்கொள்வதற்கு இந்திய அரசு புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது.

கொல்கத்தா தேசிய ஹோமியோபதி நிறுவனத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்புபவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிகவியல், விஞ்ஞானம், விலங்கியல் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். ஆங்கில அறிவு அத்தியாவசியம். 18 வயதுக்கும் 28 வயதுக்கும் உட்பட்டவர்கள் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக செயலாளர், சுதேச வைத்தியத் துறை அமைச்சு, பழைய வீதி, மஹரகம என்ற விலாசத்துக்கு இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.முழு விவரங்களையும் www.nih.nic.in என்றஇணையத் தளத்தில் அறிந்துகொள்ளலாம். (அ)

யாழ். பல்கலைக்கழகத்தின்

கலைப்பீட அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

முதலாம், நான்காம் வருட மாணவர்களுக்கான கலைமாணிப் பரீட்சைகள் இம்மாதம் 20 ஆம் திகதியும், இரண்டாம் வருட மாணவர்களுக்கான கலை மாணிப் பரீட்சைகள் இம்மாதம் 27 ஆம் திகதியும், மூன்றாம் வருட மாணவர்களுக்கான கலை மாணிப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 8 ஆம் திகதியும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன என்று கலைப்பீடாதிபதி அறிவித்துள்ளார்.

இதேவேளை முதலாம் வருட நுண்கலைமாணி (அறிமுறை) பரீட்சைகள் இம்மாதம் 27 ஆம் திகதியும், இரண்டாம் வருட நுண்கலைமாணி (அறிமுறை) பரீட்சைகள் இம்மாதம் 30 ஆம் திகதியும், மூன்றாம் வருட நுண்கலைமாணி (அறிமுறை) பரீட்சைகள் ஓகஸ்ட் 4ஆம் திகதியும், நான்காம் வருட நுண்கலைமாணி (அறிமுறை) பரீட்சைகள் ஓகஸ்ட் 13 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (50-04)

யாழ். மாவட்ட கலைஞர் விவரத் திரட்டு நாளை நல்லூரில் வெளியிடப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ். மாவட்ட கலை கலாச்சாரப் பேரவையின் 'கலைஞர் விவரத்திரட்டு' தொகுதி-1 வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கலை கலாச்சாரப் பேரவைத் தலைவரும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருமான கே.கணேஷ் தலைமையில் நடைபெறும் இந்த விழாவிற்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் சிறப்பு விருந்தினராக பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச்செயலர் கலாபூஷணம் செ.மெற்றாஸ்மயிலும் கலந்துகொள்வர்.

நூல் வெளியீட்டுரையை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் நிகழ்த்துவார். (1-7)

கடற்றொழிலாளர் பிரச்சினைகள் குறித்து ஆராய இன்று செயல்கத்தில் உயர்மட்ட மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

குடாநாட்டில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உயர்மட்ட மாநாடு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

கடற்படை, தரைப்படை ஆகியவற்றின் உயர்மட்ட தளபதிகள் இந்த மாநாட்டில் பங்குபற்றுவர்.

கடற்றொழிலாளர்கள் கடற்கரைகளில் தங்கி தமது தொழிலை மேற்கொள்ள வாடிகள் அமைத்தல், வலை வேலைகள் செய்தல், ஆழ்கடலுக்குச் சென்று தொழில் செய்தல் ஆகிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்படவிருக்கின்றன.

கடற்றொழில் அமைச்சருடன் நேற்று நடத்திய பேச்சின் போது கடற்றொழிலாளர்கள் முன்வைத்த கோரிக்கைகள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படும். (1)

நாடகமும் அரங்கியலும் இருநாள் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் ஜி.சி.ஈ உயர்தரம், வெளிவாரிப் பட்டப்படிப்பு போன்றவற்றில் நாடகமும் அரங்கியலும் பாடத் தினைப் பயில்வோரின் அரங்கியல் அறிவினை ஆழப்படுத்தும் நோக்கோடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இருநாள் கருத்தமர்வு இன்று சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை 286, பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

கருத்துரைகளை குழந்தை ம.சண்முகலிங்கம், அ.ம.ரவீந்திரன், மா.அருள்சந்திரன், கதிவகநாதன், அ.விஜயநாதன், யோ.யோண்சன், ராஜ்குமார், க.ரதீதரன், கோ.சத்தியன், எ.வைதேகி ஆகியோர் வழங்கவுள்ளனர். (50)

யாழ். மற்றும் வேலணை பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள முன்பள்ளி சிறார்களுக்கு தொடர்ந்து மூன்று மாதங்கள் இலவசமாக பால் வழங்கும் திட்டத்தை சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன்தினம் மேற்படி பிரதேச செயலகத்திற்கு விஜயம் செய்து ஆரம்பித்து வைத்துள்ளார்.

ரவி கருணாநாயக்கவுக்கு குற்றப்பத்திரம் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 11

வெளிநாட்டு நாணயமாற்றுச் சட்டவிதிகளை மீறி 30 லட்சம் அமெரிக்க டொலர்களை நாட்டுக்குள் கொண்டுவந்தார் என்று தெரிவிக்கும் குற்றப் பத்திரம், ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவுக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கையளிக்கப்பட்டது.

2006 டிசெம்பர் 22ஆம் திகதிக்கும் 2007ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதிக்கும் இடையில் இந்தப் பணத்தை சட்ட விதிகளை மீறி நாட்டுக்குள் அவர் கொண்டுவந்தார் என்று இந்தக் குற்றப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி தீபாலி விஜேசுந்தர முன்னிலையில் நேற்றுக்காலை எடுக்கப்பட்டபோதே, நீதிமன்றில் ஆஜரான ரவி கருணாநாயக்காவிடம் குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டது.

வழக்கு விசாரணையை செப்டெம்பர் 25 ஆம் திகதி நடத்துவதற்கு நீதிபதி தீர்மானம் செய்தார் என்று தகவல் தெரிவிக்கின்றன.

யாழ்.நகர மணிக்கூட்டுக் கோபுரத்தில் 'டிஜிற்றல்' மணிக்கூட்டை பொருத்த ஏற்பாடு

நிபுணர் குழு இன்று வருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்.நகர மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் டிஜிற்றல் மணிக்கூடு பொருத்தப்படவிருக்கின்றது.

இது தொடர்பாக நேரில் மதிப்பீடுகளை மேற்கொள்ள "டயலொக்" நிறுவனத்தின் நிபுணர் குழு இன்று யாழ்ப் பாணம் வருகின்றது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த மணிக்கூட்டைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மணிக்கூட்டுக் கோபுர புனரமைப்புக்கு உதவுவதாக இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்தும் உறுதி மொழி வழங்கியிருந்தார் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்த மணிக்கூடு பழுதடைந்த காரணத்தால் அது அப்புறப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது பொருத்தப்படும் மணிக்கூட்டை தூர இடத்தில் இருந்தும் பார்க்க கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா.சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடந்த யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் வன்னியில் கடமையாற்றிய மருத்துவர்கள் அண்மையில் வெளியிட்ட அறிக்கைகளுக்கு ஏற்றவாறு பொதுமக்கள் சேதம் தொடர்பில் தாம் வெளியிட்டிருந்த விவரங்களில் மாற்றம் செய்யப்போவதில்லை என இலங்கையில் உள்ள ஐ.நா. பிரதிநிதி பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

புலிகளின் அழுத்தம் காரணமாகவே தாம் சர்வதேச ஊடகங்களுக்கு மிகைப்படுத்திய தகவல்களை வழங்கியதாக வன்னி மருத்துவர்கள் அண்மையில் ஊடகங்களுக்கு தகவல் வெளி யிட்டிருந்தது தெரிந்ததே.

இது குறித்து ஐ.நா பிரதிநிதி கோர்டன் வைஸ் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுடனான இறுதி மோதலின் போது அங்குள்ள நிலைமை மற்றும் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை தொடர்பாக அங்கிருந்து கருத்து வெளியிட்ட வைத்தியர்கள், தற்பொழுது அது தொடர்பாக வெளியிடும் கருத்துக்கள் அவர்கள் செய்த பிரதான பணிக்கு, அதாவது மிகவும் கடுமையான சூழலில் மக்களுக்கு அளித்த மருத்துவ சேவைக்கு தொடர்பில்லாதவையாகக் காணப்படுகின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது ஒரு மாதிரியும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் போது அதற்கு நேர் எதிராகவும் தகவல் தெரிவிப்பதனைக் கொண்டு பார்க்கும் போது அவர்கள் இரண்டு தரப்பினராலும் அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டார்கள், பயன்படுத்தப்படுகிறார்கள் எனக் கொள்ளலாமா எனக் கேட்டதற்கு, இது போன்ற பேச்சுகளில் ஈடுபடுவது ஆபத்தானது. அவர்கள் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்படுகிறார்கள் என்று விமர்சிப்பது அனுமானத்தின் அடிப்படையிலேயே - என்றார்.

ஒரு வாரத்தில் 1,400 பேர் இறந்தனரா?

இதே வேளை லண்டனில் இருந்து வெளியாகும் ரைம்ஸ் பத்திரிகையில் வவுனியா அகதி முகாம்களில் 1,400 பேர் ஒரு வாரத்துக் குள் இறந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டிருப்பது பற்றிக் கேட்டபோது -

இதற்கு நாம் உடன்படவில்லை அந்தப் பத்திரிகைக்கு எங்கிருந்து இந்தப் புள்ளி விவரம் கிடைத்தது எனத் தெரியாது. அது வெறும் எண்ணிக்கைதான். அந்த எண்ணிக்கை எந்த ஒர் அகச் சூழ்நிலையிலும் வைக்கப்படவில்லை. இந்த மரணங்கள் எதனால் ஏற்பட்டன என்றும் ரைம்ஸ் பத்திரிகை கூறவில்லை - எம்மைப் பொறுத்தவரையில் அந்த முகாம்களில் நிலவுகின்ற இறப்பு வீதம், அது மாதிரி நிலைமைகளில் இருக்கும் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் நிலவுகின்ற இறப்பு வீதத்தையே ஒத்திருக்கிறது - என்றார் கோர்டன் வைஸ். (அ-07)

13 ஆவது திருத்தத்துக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாநகரசபைத் தேர்தலை மாநகர எல்லைக்குட்பட்ட தேர்தலாக பார்க்கக் கூடாது. தமிழ் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாகப் பார்க்கவேண்டும்.

இன்னும் ஆறுமாத காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கவிருக்கிறது. அதற்கு முன்னதாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வைக் காண பேரம் பேசும் சக்தியாக நாங்கள் உருவாக வசதியாக மாநகர சபைத் தேர்தலை மக்கள் பயன் படுத்தவேண்டும்.

நடைமுறைச்சாத்தியமான அரசியல் தீர்வைக் காண வேண்டும்; கௌரவமான தீர்வைப் பெறுவதற்கு எதிர்த்துப் பயனில்லை. சமாந்தர உறவைப் பேணவேண்டும். அரசாங்கத்துக்கு வெளியே தள்ளி நின்றால் எதுவும் சாத்தியப்படாது.

தேர்தலில் மக்கள் அளிக்கும் பலத்தை வைத்து பேரம் பேசும் சக்தியாக தீர்வு ஒன்றைப் பெறக்கூடிய சூழலை உருவாக்குவோம்.

ஜனாதிபதி 13 ஆவது சட்டத்திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வை வைக்க முன் வந்துள்ள நிலையில், அதை உறுதிசெய்ய பேரம் பேசும் சக்தியாக செயற்படுவதற்கு தேர்தலை மக்கள் பயன்படுத்தவேண்டும்.

தேர்தலில் வன்முறைகளில் ஈடுபடுதல், கள்ளவாக்குப் போடுதல் ஆகியவற்றில் வாக்காளர் ஈடுபட அனுமதிக்கக் கூடாது என்று எமது வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

வன்முறைகளில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்களுக்கு தெரிவித்துள்ளேன். வன்முறையற்ற தேர்தலாக நடைபெற மக்கள் பங்களிப்பு செய்யவேண்டும் - என்றார். (அ-1)

குளிரூட்டி மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 8 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் வைபவத்தில் இச் சேவை ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

கடலுணவுகளை கொழும்புக்கு எடுத் துச் செல்லும் சேவைகள் தொடர்ந்து நடை பெறும் என தெரிவிக்கப்பட்டது.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர், காலை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அவரது அலுவலகத்தில் வைத்து பல அமைப்புக்களின் பிரதி நிதிகளைச் சந்தித்தார்.

அதன் பின்னர் கோட்டைப் பகுதியை பார்வையிட்டார். அதைத் தொடர்ந்து நல் லூர் கந்தசுவாமி கோயிலில் வழிபாடு செய்தார்.

வீரசிங்கம் மண்டபத்தில் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை அமைச்சர் கேட்டறிந்தார்.

(3ஆம் 15ஆம் பக்கங்களில் பார்க்கவும்) (அ-1-111)

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE,JAFFNA
2009 A/L மாணவர்களுக்கான உயிரியல் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் யூலை :-18,19,20 திகதி காலை :-(8.00-10.30)க்கு பிற்போடப்பட்டுள்ளது.
கப்பிரமணியம் பொன்திவாகரன்

1,000 புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என இராணுவத் தளவதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது குறித்த சட்டப் பின்னணி குறித்து ஆராயப்பட்டு வருகின்றது என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இதேவேளை, ஏனைய 9 ஆயிரம் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அவர்கள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் எனவும் அவர் கூறினார்.

13 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடனும் பரந்துபட்ட பேச்சுக்களை மேற்கொள்ளும் அரசியல் செயற்பாடுகள் குறித்த தனது நோக்கம் பற்றி இலங்கை அரசு எமக்கு உறுதியளித்துள்ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்தும் அதற்கும் அப்பால் சென்று அர்த்தபுஷ்டியான அதிகாரப்பகிர்வை எட்டுவது பற்றியும் இலங்கை எமக்கு உறுதியளித்துள்ளது.

இலங்கையில் மோதல்கள் முடிவுக்கு வந்துள்ளமை, அங்குள்ள மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் அதன் மூலம் முழு பிராந்தியத்திற்கும் நன்மை ஏற்படுத்துவதற்குமான புதிய ஆரம்பத்திற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது.

இலங்கையை மிக மோசமாக பாதித்துள்ள வன்முறையும், பயங்கரவாதமும் முடிவுக்கு வந்துள்ளமையைத் தொடர்ந்து அனைவரையும் உள்ளடக்கிய பேச்சு மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசியல் நடைமுறைகள் அவசியம் என்று நாம் கருதுகிறோம்.

தமிழ்ச் சமூகத்தினர் உட்பட சிறுபான்மை சமூகங்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஐக்கிய இலங்கையின் ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் இது இடம்பெற வேண்டும்.

இதேவேளை, இலங்கையில் புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், புனர்நிர்மாண பணிகளுக்கு இந்தியா அனைத்து உதவிகளையும் வழங்கும்.

இந்திய அரசு இதற்காக 500 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இன்னமும் மேலதிக நிதியை ஒதுக்கத் தயாராகவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்வதற்கு வசதியாக நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைக்கு இந்தியா உதவுகின்றது.

இலங்கை அரசு இடம்பெயர்ந்தவர்களை 180 நாள்களுக்குள் மீளக் குடியேற்றுவதாக உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கான எமது தூதுவர் சில முகாம்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமை குறித்து தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேசமயம், இந்திய அரசு தனது மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியாகவுள்ளது.

இந்திய - இலங் கைக் கடற்பரப்பில் எமது மீனவர்களின் பாதுகாப்புக் குறித்து இந்தியா தொடர்ந்து கண்காணித்து வரு கின்றது.

இது தொடர்பாக 2008 இல் காணப்பட்ட இணக்கப்பாட்டை உறுதியாக பின்பற்றவேண்டும் என இலங்கை அரசிற்குத் தெரிவித்துள்ளோம். - என்றார்.

(அ-சி)

அகதி முகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரியிருக்கின்றது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான கதிர்காமு மாணிக்கராஜா (பாட்டன்), மாணிக்கராஜா சிவபாக்கியம் (பாட்டி), ஜெயராணி சுரேந்திரநாதன் (தாய்), பொன்னுச்சாமி சுரேந்திரநாதன் (தகப்பன்), கோபிகா சுரேந்திரநாதன் (13 வயது மகள்), நேசனா சுரேந்திரநாதன் (மகள்), கிஷோர் சுரேந்திரநாதன் (மகன்) ஆகிய - வன்னி, புளியம்பொக்கணை, பெரிய குளத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனு சம்பந்தமான வழக்கிலேயே இந்த உத்தரவு நேற்றுப் பிறப்பிக் கப்பட்டது.

பிரிந்த இக்குடும்பத்தவர்கள் கொடிகாமத்திலும், வவுனியாவிலும் இரு வேறு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்த மனு நீதிமன்றின் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டதை அடுத்து, நீதிமன்ற உத்தரவுப்படி இக்குடும்பத்தவர்கள் வவுனியா சைவப்பிரகாச முகாமில் ஒன்றுசேர்த்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் காயமுற்றிருக்கும் கோபிகா சுரேந்திரநாதன் என்ற சிறுமிக்கு சிகிச்சையளிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொதுமக்களான இவர்களை எந்தத் தவறும், குற்றமும் செய்யாத நிலையில் தடுத்து வைத்திருப்பதற்கு சட்டத்தில் இடம் ஏதுமில்லை என அடிப்படை உரிமை மீறல் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதனால் இவர்களை விடுதலைசெய்ய உத்தரவிடுமாறும் மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று இந்த மனு உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, பி.ஏ. இரட்னாயக்கா, சந்திரா எக்கநாயக்கா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது, மேற்படி சிறுமியை உடனடியாக உரிய வைத்திய நிபுணர் முன் ஆஜர் செய்து, மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கும்படி நீதியரசர்கள் அநுராதபுரம் வைத்தியசாலை அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்தனர்.

அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான இக்குடும்பத்தவர்களை நீதிவான் ஒருவர் முன் ஆஜர் செய்து விடுவிக்கும் நடவடிக்கைக்கு அரசு இணங்குமா, அதற்குத் தயாரா என்பதை விசாரித்தறிந்து எதிர்வரும் 20 ஆம் திகதி நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தும்படி, அரசுத் தரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணி ரியாஸ் ஷம்ஸாவை நீதியரசர்கள் பணித்தனர்.

இந்த வழக்கில் அவ்வாறு அக்குடும்பத்தவர்களை விடுவிக்க அரசு இணங்குமானால், இதே நடைமுறை, எதுவித குற்றமும் புரியாத நிலையில் - குற்றச்சாட்டுகள் ஏதும் சுமத்தப்படாத நிலையில் - வவுனியா நலன்புரி மையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான தமிழ் அகதிகளை விடுவிப்பதற்கான முன்மாதிரியாகவும், வழிகாட்டுதல் தீர்ப்பாகவும் அமைத்துவிடும் என விடயமறிந்த சட்டவட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜா தாக்கல் செய்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னி அகதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவர் கைது செய்யப்படும் போது அரசமைப்பின் கீழ் அவருக்குள்ள உரிமைகளை உறுதி செய்யுமாறும் ஐ.நா.அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கைது செய்யப்படுபவர் குறித்து குடும்பத்தவர்களுக்கு அறிவிக்கப்படுவதும் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை உறுதி செய்வதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பங்களிப்புச் செய்வதும் முக்கியமானவை என்றும் ஐ.நாவின் கொழும்பு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மேற்படி அகதிகளின் பாதுகாப்பு விடயம் தொடர்பில் கடந்த ஒரு மாத காலப்பகுதியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் இன்னமும் உறுதியான நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

முகாம்களுக்குள் இராணுவத்தினரின் பங்களிப்பு குறைக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ்வதால் உருவாகக் கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தொடர்ந்தும் அவதானித்து வருகின்றது.

சமூக சீர்குலைவு, சட்டம் - ஒழுங்கு, பாலியல் வன்முறைகள் குறித்த கரிசனைகள் காணப்படுகின்றன.

நடமாட்ட சுதந்திரம் இல்லாமை கவலைக்குரியது

முகாம்களில் உள்ள - இடம்பெயர்ந்த - 2 லட்சத்து 80 ஆயிரம் பேரின் ஒட்டு மொத்தக் கவலையாக நடமாட்ட சுதந்திரம் காணப்படுகின்றது.

விசேட தேவைகள் உள்ளவர்களை உரிய நேரத்தில் விடுவிக்குமாறும், மேலும் பரந்துபட்டளவு பிரிவினரை விடுவிக்குமாறும் ஐ.நா. தொடர்ந்தும் வாதாடி வருகின்றது.

குடும்பங்கள் மீள இணைக்கப்படுவதும் முன்னுரிமைக்குரிய விடயமாக உள்ளது.

ஜூன் மாத இறுதிக்குள் 5 ஆயிரம் குடும்பங்கள் மீள இணைக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய 9 ஆயிரத்து 400 தனிநபர்கள் பொதுமக்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் குடிதண்ணீர், சுகாதாரம், கழிவுஅகற்றல் என்பனவற்றில் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

சுகாதார வதிகள் முன்னுரிமைக்கு உரியவை

இடம்பெயர்ந்து முகாம்களிலுள்ள 2 லட் சத்து 80 ஆயிரம் பேருக்கான போதியளவு - குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவது முன்னுரிமைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

வவுனியாவில் பெருமளவு மக்கள் வாழும் முகாம்களை மக்கள் நெரிசலற்றவையாக மாற்றவேண்டும்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான பூரண உணவை வழங்குவதற்கான நிதி, அரசசார் பற்ற அமைப்புகளிடம் குறைவடையத் தொடங்கியுள்ளமை கவலை அளிக்கின்றது. இடம்பெயர்ந்த மக்கள் தங்களுடைய எதிர்காலம், மீளகுடியேறுவது மற்றும் தங்களுடைய பகுதிகள் எவ்வாறுள்ளன போன்ற விடயங்கள் குறித்த தகவல்களைப் பெறுவதற்காகக் காத்திருக்கின்றனர்.

கண்ணிவெடிகளை அகற்றுதல், அரச சேவைகளை மீள ஏற்படுத்துதல் போன்ற விடயங்களில் முக்கிய சவால்கள் உள்ளன.

அரச தலைமை, ஐ.நா. மற்றும் இலங்கையின் ஏனைய சகாக்களுடன் சேர்ந்து இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-சி)

வெளிவந்துவிட்டது
(Speed Marketing)
Royal College Exam. Paper
வணிகக்கல்வி - பௌதிகவியல்
கணக்கீடு - இரசாயனவியல்
பொருளியல் - இணைந்த கணிதம்
அன்னை புத்தகசாலை
இல- 7, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 222 9881

வேலையாள் தேவை
வெங்கடேஸ்வரா சைக்கிள் கடைக்கு கணக்காளர், விற்பனையாளர், சிட்டை எழுதுநர் உடன் தேவை.
தொடர்பு :- வெங்கடேஸ்வரா
இல.125A , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 021 222 8306

தேவை
சித்த சுவாதீன மற்ற பெண் பிள்ளையைப் பராமரிப்பதற்குரிய முழு நேரஆள் (பெண்) தேவை. கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்.
தொடர்பு :- இல.186/2 B,பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
T.P - 0776333133

MANOJ EXPRESS
யாழ். - கொழும்பு விமான சேவை
12.07.2009 திகதி யாழ். - கொழும்பு DL4103 குரிய கட்டணம் ஒருவழி 8000/00 உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
222 3916, 0777517019

TVS இன் புதிய அறிமுகம்
இன்று முதல் விற்பனையில்
TVS Sooty Streak (90 CC)
★ யாழ்.நகரில் முதல் முறையாக புதிய ஸ்கூட்டி ஸ்ரீக்
★ நீங்கள் விரும்பிய நிறங்களில் பெற்றுக்கொள்ளமுடியும்
TVS Company யின் ஏக விநியோகஸ்தர்
யசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7566

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org